நம் வழி வேளாண்மை

பருவம் 23 அக்டோபர் – டிசம்பர் 2014 இதழ் 3

இயற்கை வழி விவசாயிகள், மூலிகை வைத்தியர்கள் மற்றும் அடித்தள கண்டுபிடிப்பாளர்களின் குரலோசை

நம்வழி வேளாண்மை

பருவம் 23 அக்டோபர்–டிசம்பர் 2014 இதழ் 3

ஆசிரியர்
பெ. விவேகானந்தன்

நம் வழி வேளாண்மை தத்துவம்

தேனீக்கள் மலரை நாடிச் செல்கின்றன. மலருக்கு மலர் தாவி தேனை எடுக்கின்றன. தேனை எடுப்பதால் மலர் குறைபடுவதில்லை. மாறாக மலர் கருவுற்று காயாக, கனியாக துணை செய்கின்றன. தேனீக்களின் இந்த சேவையினால் மலரும் பயன் பெறுகின்றது. தனக்கும் பிறருக்கும் பயன்படும் தேனையும் அள்ளி சேகரிக்கின்றது. இந்த சேவை தத்துவத்தை பின்பற்றி நம்வழி வேளாண்மை ஒரு சிலரிடம் உள்ள உத்திகளையும் மற்றும் ஒரு பகுதியில் உள்ள பாரம்பரிய அறிவையும் எடுத்து வெளிக்கொணர்ந்து மற்றவர்களுக்கும் பிற பகுதிகளுக்கும் அறிமுகப்படுத்தி மேலும் உய்ய வழி வகுக்கின்றது.

நம்வழி வேளாண்மை குழுமம்
பிற மொழி இதழ்கள்

ஆங்கிலம் – தேனீ (Honey Bee)
குஜராத்தி – லோக் சர்வானி
ஹிந்தி – சூஜ் புஜ் ஆஸ் பாஸ்கி
ஒரியா – அமா அகாபகா
தெலுங்கு – பல்லி ஸ்ருஜானா
கன்னடம் – ஹித்தலகிடா
மலையாளம் – இனிகர்ஷகான் சம்சாரிகட்டே

நம் வழி வேளாண்மை
45, டி.பி.எம். நகர்,
விராட்டிபத்து, மதுரை – 625 016.
தொலை பேசி : 0452– 2380082, 2380943.
இமெயில் vivekseva@gmail.com

ஆங்கில இதழ் முகவரி
Prof. Anil Gupta,
Honey Bee,
Indian Institute of Management,
Vastrapur, Ahmedabad -380 015
email: honeybee@sristi.org
www.nifindia.org ; www.sristi.org

சுவற்றின் மறுபக்கம்

(அட்டை பட கதை)

ஓர் இளம் பெண்மணி பூந்தோட்டம் பராமரிப்பில் மிகவும் ஆர்வம் கொண்டு பல வகையான பூச்செடிகளை வளர்த்து வந்தார். இவள் தனது பாட்டியிடமிருந்து பூச்செடிகளின் மீது அன்பு செலுத்தி பராமரிப்பதை கற்று கொண்டார். இவள் தனது பாட்டியை போல பூந்தோட்டம் வேலைகளில் திறமை பெற்று விளங்கினார். ஒரு முறை கொத்துக் கொத்தாக பூக்கும் ஒரு பூச்செடியை பற்றி கேள்விபட்டாள். இதனுடைய கன்றை தனது பூந்தோட்டத்தில் நடவு செய்தாள். செடி நன்றாக வளர்ந்து வந்தது. கிளைகள் நன்கு படர்ந்து சுவற்றின் இரு புறமும் செழிப்பாக காணப்பட்டது. இதற்கு நல்ல உரமும் தண்ணீரும் இட்டு வளர்த்து வந்தாள். பூக்கள் பூக்கும் தருணத்தை எதிர்பார்த்திருந்தாள். ஆனால் பூக்கள் அரும்பவில்லை. நாளுக்கு நாள் காத்திருந்தது தான் மிச்சம். இனிமேல் பராமரித்து என்ன பயன் என்று நினைத்து பூச்செடியை வேருடன் அப்புறப்படுத்த எண்ணினாள். இந்த இடத்தில் வேறு பூச்செடியை நட முடிவு செய்தாள். பக்கத்து வீட்டு பெண்மணி இந்த நடவடிக்கையை கவனித்து பின் இந்த பூச்செடி காம்பவுண்டு சுவரில் ஓர் துவாரம் வழியாக தன் வீட்டு பகுதியில் அழகான பூக்களுடன் பூத்து குலுங்குவதை எடுத்து கூறினார். இதனை கேட்டு வியந்த பூந்தோட்டகாரி பக்கத்து விட்டு பகுதியில் தனது பூச்செடி பூத்ததை கண்டு வியந்தாள். நமக்கு பலன் தெரியவில்லை என்பதற்காக நமது முயற்சி வீணாகிவிட்டது என்று எண்ணி விடலாகாது.

பெரும்பாலான கண்டுபிடிப்பாளர்கள் தங்களது கண்டுபிடிப்புகளை அல்லது பாரம்பரிய அறிவை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர். ஆனால் சில கண்டுபிடிப்பாளர்கள் மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கு தயக்கம் காட்டுவர். இதன் மூலம் தங்களுக்கு வரும் ஆதாயம் தடைபடும் என எண்ணுவார்கள். பொதுவாக தங்களது கண்டுபிடிப்பு சமுதாயத்திற்கு பயன்படும் பொழுது கண்டுபிடிப்பாளர் சந்தோஷம் அடைவார். இந்த கதையில் பூச்செடி சுவற்றின் மறுபக்கம் மட்டும் பூப்பதை அறிந்த பூந்தோட்ட க்காரி சந்தோஷப்பட்டாள் . நாம் விதைப்பது நமக்கு மட்டும் பலன் கிடைப்பதற்கு மட்டும் அல்ல. இந்த தத்துவத்தில் தான் நம் வழி வேளாண்மை என்ற தேனீ குழுமம் இயங்கி வருகின்றது.

நன்றி: தேனீ ஏப்ரல் – ஜூன் 2014

பாரம்பரியத்தை அடித்தளமாகக் கொண்டு புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கும் டினஜின் பல்கலைகழகம்

கடந்த 25 வருடங்களுக்கு முன்னர் தேனீ குழுமம் என்ற நம்வழிவேளாண்மைக்குழுமம் மூலம் இந்தியாவில் பல மாநிலங்களில் பராம்பரிய அறிவை புதுப்பிக்கவும், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கவும் ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. இதன் படி பாரம்பரிய அறிவையும், சாதாரண மக்களின் படைப்புத்திறனை ஊக்குவிக்கவும் இதன் மூலம் இன்று எதிர் நோக்கியுள்ள பிரச்சனைகளுக்கு தீர்வு காணவும் ஒரு மக்கள் இயக்கம் உருவானது என்றால் அது மிகையாகாது. இதனைப் பற்றி தெரிந்துகொண்ட சீன தேசத்து டினஜின் பல்கலைகழக பேராசிரியர்கள் இது போன்ற இயக்கத்தை சீனாவிலும் உருவாக்கவேண்டும் என்ற முனைப்புடன் செயல்பட்டனர். இதனால் கல்லூரியில் பயிலும் மாணவர்களைக் கொண்டு விவசாயிகள், கிராம மக்கள் உருவாக்கிய புதிய கண்டுபிடிப்புகளில் ஆராய்ச்சி மேற்கொண்டு ஒரு விற்பனைப் பொருளாகக் கொண்டு வரவும் சமுதாயத்திற்கு பயன்படுமாறு செய்யவும் முனைந்துள்ளனர். இதனால் ஒவ்வொரு கல்லூரி கல்கலைகழகத்திலும் பல நூற்றுக்கணக்கான மாணவர்களை இதில் ஈடுபடுத்தி பல கண்டுபிடிப்புகளை மேம்படுத்தி வருகின்றனர். இதனை ஆங்கிலத்தில் Inclusive University with Incubator with students என்ற தலைப்பில் ஜனவரி 19– 22 (2015) ல் அஹமதாபாத்தில் நடைபெற்ற உலகளாவிய அடித்தள கண்டுபிடிப்புகள் கருத்தரங்கில் பகிர்ந்து கொண்டனர். கண்டுபிடிப்புகள் அடைகாக்கப்பட்டு முட்டை குஞ்சு பொறிப்பது போன்று மேன்மைப்படுத்தப்பட்டு சந்தைப்படுத்தவும் சமுதாயத்திற்கு மக்களின் பிரச்சனைகளுக்குத் தீர்வாகவு மிருக்க வேண்டும் என்று கூறபட்டது.

மத்திய அரசின் பொருளாதார சீர்திருத்தம்

புதுடெல்லியில் செம்மறி ஆடு , வெள்ளாடு , கோழிகள் வளர்க்கும் கிராம மக்களின் வாழ்வாதாரமுன்னேற்றம் குறித்து தேசிய அளவிலான கருத்தரங்கம் ஜனவரி மாதம் 16–17 தேதிகளில் நடைபெற்றது. இதில் அரசு துறை அதிகாரிகள் , தொண்டு நிறுவனங்கள் , ஆர்வலார்கள் கலந்து கொண்டனர். இதில் பேசிய மத்திய அரசின் கால்நடை துறை இணை செயலாளர் சஞ்சய் பூஸ்ரெட்டி கூறுகையில் ''கால்நடை துறைக்கு மத்திய அரசிடமிருந்து ஒதுக்கப்பட்ட 999 கோடியில் 273 கோடி மட்டுமே வந்துள்ளது. இதனால் திட்ட பணிகள் முடங்கி உள்ளன. இருப்பினும் மாநில அரசுகளின் திட்டங்களை பரிசீலினை செய்து உதவ தயாராக இருக்கின்றோம். இது வரை தமிழ்நாடு மாநில கால்நடை துறை, அஸ்ஸாம் மாநில கால்நடை துறை ஆகியன மட்டுமே முறைப்படி எங்களிடம் நிதி தேவையை சமர்பித்து ஒப்புதல் பெற்று சென்றுள்ளனர். தொண்டு நிறுவனங்கள் செய்யும் நல்ல பணிகளுக்கு தேசிய கால்நடை மிஷன் திட்ட மூலம் (livestock misson mode project) மாநில அரசு மூலம் விரைவில் நிதி உதவி கொடுக்க ஏற்பாடு செய்வதாக கூறினார். செம்மறி ஆடு , வெள்ளாடு வளர்ப்போருக்கு அரசு மூலம் சமுதாய ஆயுள் காப்பீடு (community insurance) திட்டம் அறிமுகம் செய்ய அணைத்து ஏற்பாடுகளும் செய்யப்படும் என்று உறுதி அளித்தார்.

மத்திய அரசின் பிற துறைகளிலும் துறைகளுக்கு வர வேண்டிய நிதி கனிசமாகக் குறைக்கப்பட்டு நிதி தட்டுப்பாட்டை உண்டாக்கியுள்ளது . புதிதாக பதவி ஏற்ற மாண்புமிகு நாரேந்திரமோடி அரசு பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் பல துறைகளுக்கு நிதி பற்றாக்குறையை உருவாக்கி உள்ளது. இதன் மூலம் நல திட்டங்கள் முடங்கிடவே வழி வகுக்கும். – ஆசிரியர்

வையாபுரியின் கால்நடை மூலிகை வைத்தியம்

கரூர் மாவட்டம் கிருஷ்ணராயபுரம் தாலுகா வேலன் காட்டுப்பட்டி எனும் கிராமத்தில் திரு. வையாபுரி (48) வசித்து வருகிறார். இவர் 4ம் வகுப்பு வரை படித்துள்ளார். இவருக்கு 4 குழந்தைகள் உள்ளன. இவருக்குச் சொந்தமாக 5 ஏக்கர் நிலம் உள்ளது. இதில் எள், சோளம், நிலக்கடலை போன்றவை பயிரிட்டு மகசூல் பெற்று வருகிறார். இவர் 2 கறவை மாடுகள் , 26 வெள்ளாடுகள்,

4 நாட்டு நாய்கள் (2 பால் கன்னி நாய்) மற்றும் 13 நாட்டு கோழிகள் தோட்டத்தில் வைத்து பராமரித்து வருகிறார். இவரது மனைவி திருமதி லெட்சுமி (40) கால்நடை பராமரிப்பு மற்றும் மூலிகை வைத்தியத்திற்கு பெரிதும் உறுதுணையாக இருந்து வருகிறார். திரு. வையாபுரி கால்நடை மூலிகை வைத்திய முறைகளை தனது தந்தை திரு. புரைக்காளனிடம் கற்றுக் கொண்டுள்ளார். இவரது கால்நடை மூலிகை வைத்திய முறைகள் பின்வருவன.

காய்ச்சலுக்கு

தேவையான பொருட்கள் : ஓமம் – 10 கிராம், மிளகு – 10 கிராம், பூண்டு – 5 பல், பெருங்காயம் – 20 கிராம், செருப்படித்தழை – 2 கைப்பிடி மற்றும் கோழி முட்டை – 2 எண்ணம்.

செய்முறை : மேற்க்கண்ட அனைத்தையும் சேர்த்து அரைத்து 1 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைக்கவும். பின்னர் எடுத்து வடிகட்டி மாட்டிற்கு 200 மி.லியும் ஆட்டிற்கு 100 மி.லி வீதம் 2 வேளைக்கு கொடுக்கலாம்.

ஆடு மாடு கழிச்சலுக்கு

அகத்திக் கீரை – 1/2 கிலோ , பனைவெல்லம் – 100 கிராம், சீரகம் – 20 கிராம் சேர்த்து அரைத்து 1/2 லிட்டர் தண்ணீரில் கொதிக்க வைக்கவும். பின்னர் எடுத்து வடிகட்டி ஆட்டிற்கு 100 மி.லி மாட்டிற்கு 200 மி.லி வீதம் 3 வேளை கொடுக்கலாம்.

விஷகடிக்கு

வேலிப்பருத்தி இலை சாறு 200 மி.லி இதனுடன் சுண்ணாம்பு 50 கிராம் சேர்த்து கலக்கி மாட்டிற்கு 200 மி.லி கொடுக்கலாம்.

குறிப்பு:வேலிப்பருத்தி இலை கிடைக்க வில்லையென்றால் கோவைத்தழை அல்லது கரிசலாங்கண்ணி தழை சேர்த்துக் கொள்ளலாம்.

வண்டு கடிக்கு

தலைச்சுருளி இலை 2 கைப்பிடி இதனுடன் பூலைப்பூ வேர் 2 கைப்பிடி அளவு எடுத்து நீர் விட்டு அரைத்து 2 உருண்டை (பெரு நெல்லி அளவு) கொடுக்கலாம்.

ஆடு மாடு தெளியாமலிருந்தால்

தேவையான பொருட்கள் : சாதிலிங்கம், கஸ்தூரி மஞ்சல் , கோராசணம் , அதிமதுரம் , நிலவேம்பு இலை , பேய்புடலை இலை , வீரசிங்கம்பட்டை, ஜாதிபத்திரி, லவங்கபத்திரி, பூண்டு, வால் மிளகு, வலம்புரிகாய், கடுக்காய் கொட்டை, ஜாதிக்காய் மற்றும் ஆவாரந்தழை மேற்க்கண்ட அனைத்தும் 5 கிராம் அளவு எடுத்து அரைத்து உருண்டையாக செய்து ஆடு மாட்டிற்கு வாரத்திற்கொருமுறை கொடுத்து வந்தால் ஆடு , மாடு தீனி நன்றாக சாப்பிடும். உடம்பு தெளியும்.

மாட்டிற்கு கண்ணில் பூ விழுந்தால்

பிலிமூட்டுத்தழை – 2 கைப்பிடி, மிளகு–15 எண்ணம், சுக்கு– 10 கிராம், வெள்ளைபூண்டு – 4 எண்ணம், கோவை இலை சேர்த்து அரைத்து வெள்ளாட்டு கோமியத்தில் கலந்து கண்ணில் ஒரு வேளைக்கு 2 சொட்டு வீதம் 3 வேளை செய்தால் குணமாகும்.

மாடு சாணி போடாமலிருந்தால்

தேவையானவை: உசிலை மரக்காளான் (காய்ந்தது) – 10 காளான், பூவரசம் இலை (பழுத்தது) – 2 கைப்பிடி பூவன் பழம் – 20 எண்ணம் , சீனி– 250 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து காய வைத்து பவுடர் செய்து வெண்ணீரில் கலந்து உருண்டையாக செய்து கொடுக்கலாம்.

வயிறு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு

குண்டுமணி இலை – 1/2 கிலோ, மஞ்சள் பொடி – தேவையானது, தேங்காய் – 4 எண்ணம், வெங்காயம் – 250 கிராம், ஓமம் – 30 கிராம். மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து அரைத்து உருண்டையாக செய்து மஞ்சள் பொடி தூவி விடவும். ஒரு மாட்டிற்கு 4 உருண்டை கொடுக்கலாம். இதை வாரத்திற்கு ஒரு முறை செய்து கொடுத்தால் ஆடு மாடுகளுக்கு வயிறு சம்பந்தப்பட்ட அனைத்து நோய்களையும் கட்டுப்படுத்தும்.

மாடு சினைபிடிக்காமலிருந்தால்

முன்ஒட்டி பின் ஒட்டி தழை 1/2 கிலோ இதனுடன் சோற்றுக்கற்றாழை 6 மடல் சேர்த்து அரைத்து உருண்டை செய்து 2 வேளை கொடுத்த பின்பு காளைக்குப் போட்டால் சினை பிடித்து விடும்.

பாலின் அளவை கூட்ட

அம்மான் பச்சரிசி தழை – 1 கிலோ எடுத்து அரைத்து மக்காச்சோள தவிட்டுடன் கலந்து கொடுத்தால் பாலின் தரம் அளவு கூடும் .

கட்டிகள், கழலைகளுக்கு

தேவையானவை: வேப்பெண்ணெய் – 1 லிட்டர், அமுக்கிராம் பட்டை – 100 கிராம், நிலக்குன்னி பட்டை – 100 கிராம், துத்தம் – 50 கிராம், கந்தகம் – 50 கிராம், பச்சைக்கற்பூரம்–50 கிராம்.மேற்க்கண்ட அனைத்தையும் எடுத்து பவுடர் செய்து ஒரு லிட்டர் வேப்பெண்ணெயுடன் கலந்து நன்கு கொதிக்க வைக்கவும். பின்னர் எடுத்து வடிகட்டி ஒரு பாட்டிலில் வைத்து தேவைப்படும் போது கட்டிகள் கழலைகள் மீது தடவலாம்.

பு. வையாபுரி (மாட்டு வைத்தியர்)
த/பெ. புரைக்காளன்
வேலன் காட்டுப்பட்டி , குப்பாச்சிபட்டி அஞ்சல்
சிவாயம் பஞ்சாயத்து , கிருஷ்ணராயபுரம் தாலுகா
கரூர் மாவட்டம் – 639120 , செல் : 8760570036

கேரளாவில் சிறந்த ஜாதிக்காய் ரகங்கள்

ஜாதிக்காய் நம் நாட்டிற்கு வந்து குடியேறிய ஒரு வாசனைப் பயிராகும். 18ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனியால் இந்திய மண்ணில் அறிமுகம் செய்யப்பட்ட பயிர்தான் இந்த ஜாதிமரம் என்று நம்பப்படுகிறது. இந்தியாவில் குறிப்பாக தென் பகுதியே இதன் வளர்ச்சிக்கு ஏற்ற இடமாக அமைந்தது. பிறகுதான் ஜாதிக்காய் கிரனடா போன்ற நாடுகளுக்குப் பரவியது.

ஜாதிக்காய் விவசாய ரீதியில் கேரளா, தமிழ்நாடு, கர்நாடகம், மகாராஷ்டிரம், கோவா, அந்தமான் நிக்கோபார் தீவுகள் மற்றும் வடஇந்தியாவில் ஒரு சில பகுதிகளில் பயிரிடப்பட்டு வருகிறது. இந்தியாவில் ஜாதிக்காய் உற்பத்தி 2012–2013 ஆண்டு கணக்குப்படி சுமார் 12,620 டன் உற்பத்தி செய்யப்பட்டது. கேரளத்தில் மட்டுமே 17.545 ஹெக்டர் பரப்பில் பயிரிடப்படுகிறது. இது நம் நாட்டின் மிகப்பெரிய ஜாதிக்காய் பயிராகும் பரப்பு என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஜாதிக்காய் நமது நாட்டிற்கு அறிமுகமான பயிர்வகை என்பதால் இதன் பயிர்ப்பெருக்கம் என்பது பதியம்முறையில் இருந்து வந்தது. காலப்போக்கில் விவசாயிகளின் நேரடி கண்காணிப்பின் காரணமாக அவர்களே அதிக விளைச்சலும் தரமும் கொண்ட நல்ல மரங்களைக் கண்டடிறிந்து அவற்றிலிருந்து ஒட்டுக்கட்டுதல் போன்ற முறைகளில் பயிர்ப்பெருக்கம் செய்து ஜாதி விவசாயத்தில் சாதனை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனைப் போலவே வேறு பலபயிர்களிலும் விவசாயிகளின் தனிப்பட்ட முயற்சியால் மட்டுமே சிறந்த இனங்கள் உருவாக்கப்பட்டது என்பதே உண்மையாகும். இவ்வாறு ஜாதிக்காய் விவசாயத்தில் தனியான ரகங்களை உருவாக்கி சாதனை செய்து வரும் விவசாயிகளைத் தேடி ஒரு பயணம் கேரளத்தில் எர்ணாகுளம், இடுக்கி மற்றும் கோட்டயம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டது. இதில் கோழிக்கோட்டில் கோடஞ்சேரி என்ற கிராமத்திலுள்ள இளம்விவசாயி ஜான்ஜோசப் என்பவரே சிறந்த ஜாதிமரங்களைத் தேடும் முயற்சியில் முதலடி எடுத்துவைத்த முன்னோடி என்று கருதப்படுகிறார். கீழ்க்கண்ட அட்டவணையில் சிறந்த முறையில் ஜாதித்தோட்டங்களை அமைத்துள்ள விவசாயிகளின் விபரம் தரப்பட்டுள்ளது.

1) திரு. ஜோஸ் மேத்யூ, கொச்சு குடியில், கலூர் அஞ்சல், காலூர்க்காடு, மூவாட்டுபுழா, செல் : 09446010630
ஆற்றோரத்தோட்டம், ஜாதிமர இனத்தின் பெயர் 'கொச்சுகுடி விரிவான நாற்றுப்பண்ணை உண்டு. 25 வயதான மரங்களிலிருந்து ஒரு வருடத்திற்கு கிடைக்கும் காய்கள் 4000 முதல் 5000 வரை. இதில் உலர்ந்த காய்கள் 7200 கிலோவும் ஜாதிப்பத்திரி 2400 கிலோவும் ஒரு ஹெக்டேரில் கிடைக்கின்றது. ஆண்டு வருமானம் சுமார் ஆறு லட்சம்.

2) திரு. ஜஸ்டின் ஜோசப், நெல்லிப்பாரா, இடுக்கி.
அதிக விளைச்சலுடன் பருத்த காய்கள் மரத்திற்கு 6000–7000 காய்கள் சுமார் 40 வருடமுள்ள மரத்திலிருந்து பயிர்ப்பெருக்கம் செய்யப்பட்டது.

3) திரு. வர்க்கி தொம்மன், கொன்னதடி, புன்னதானத்து வீடு, முனியரா அஞ்சல், இடுக்கி. செல் : 09656053779
இனத்தின் பெயர் புன்னத்தானம், பருத்த காய்கள், 50 உலர்ந்த ஜாதிக்காயின் எடை ஒரு கிலோவும், 250 ஜாதியிலிருந்து ஒரு ஜாதிப்பத்திரியும் கிடைக்கிறது. ஒரு ஜாதிக்காயின் எடை 20 கிராம். பத்திரியின் எடை நான்கு கிராம். 20வயது ஆண்டில் ஒரு மரத்தில் காய்களின் எண்ணிக்கை 1750, விவசாயப் பரப்பு மூன்று ஏக்கர்.

4) திரு. ஜார்ஜ்தாமஸ், காவுகாட்டு வீடு, அந்திநாடு அஞ்சல், முனியரா அஞ்சல், இடுக்கி.செல் : 09446126438 . பருத்த உயர் விளைச்சல் தரும் காய்கள், தரமான பத்திரி, கேரளத்தின் பல பாகங்களிலிருந்துள்ள உயர் விளைச்சல் தரும் மரங்களிலிருந்து பயிர்பெருக்கம் செய்யப்பட்டது.

5) திரு. சிபு, அரீக்காடு, கதலிக்காடு, தொடுபுழா.
செல் : 09447330699 . சிறிய அளவிலான காய்கள் அதிகமான விளைச்சல், சிறிய காய்கள், பத்திரியின் அடர்த்தி அதிகமானது.

6) திரு. பிரின்ஸ் சூரியன், வாழானகுழி, புத்தன்புரலில், மாரங்கோலி, சாந்திபுரம், கோட்டயம்.செல் : 09446122467. அதிகவிளைச்சல், முன்னதாகக் காய்க்கும். மலேசியாவிலிருந்து உறவினர்கள் கொண்டு வந்த செடிகளிலிருந்து பயிர்ப்பெருக்கம் செய்தது.

7) திரு. ஜேம்ஸ் ஜோசப், காக்கப்பாரா வீடு, மணிமலா, கோட்டயம். செல் : 09745292354 . காக்கப்பாரா, 1, 2, 3 என்று மூன்று இனங்கள் உள்ளன. மூன்றும் வெவ்வேறு சிறப்பியல்புகளுடன் அதிக விளைச்சல் தருபவை. பாரம்பரியமான தோட்டத்திலிருந்து பயிர்ப்பெருக்கம் செய்யப்பட்டது.

மேற்கூறப்பட்ட ரகங்களின் பொதுவான சிறப்பென்பது அதிக விளைச்சலாகும் மற்றும் பருத்த, திரட்சியான காயும் பத்ரியும் சிறப்பான காரணிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டது. எல்லா விவசாயிகளுமே ஒட்டுரக ஜாதி நாற்றுக்களை விற்பனையும்

செய்கின்றனர். இவை சுமார் ஆறு மாதம் முதல் ஓராண்டு நிரம்பியவை. பெரும்பாலும் இளம் விவசாயிகளான இவர்கள் தங்களது விவசாய நுணுக்கங்களைத் தங்களது குடும்பத்தைச் சேர்ந்த பெரியவர்களிடம் தெரிந்துகொண்டு அதில் நவீனத்தைப் பயன்படுத்தி சாதனை செய்து வருகின்றனர். இதற்கு சான்றாக தாங்கள் உருவாக்கிய ரகங்களுக்கு தங்களது குடும்பப் பெயர்களையே வைத்துள்ளனர். அவை 'கொச்சுகுடி', 'கிணர்றிங்கரா', 'காக்கப்பரா', 'புன்னாந்தனம்', 'கடுக்கன்மாக்கன்' என்பவையாகும். மரவாசனைப் பயிர்ப்பெருக்க ஆய்வு செய்வது என்பது சுமார் மூன்று முதல் நான்காண்டுகள் காத்திருப்பது என்பது ஒரு தவம் போன்றது. முதல் விளைச்சலைக் காணும்வரை அந்த விவசாயியின் காத்திருத்தலுக்கு இணையாக எதையும் தரமுடியாது, இவ்வாறு உருவாக்கி எடுத்த இனத்தைப் பராமரித்து, கண்காணித்து விளைச்சல் எடுக்கும் முயற்சியில் ஒரு குடும்பம் முழுவதுமே ஈடுபட்டுவருகிறது என்பதே இவர்களின் வெற்றி ரகசியமாகும்.

மேலும் ஜாதிக்காயின் தோலிலிருந்து ஒயின் தயாரித்த திரு. ஜேம்ஸ் ஜோசப்பின் மனைவி திருமதி. சிஜி ஜேம்ஸ் அதன் செய்முறையையும் வழங்கியுள்ளனர். சிறிதாக நறுக்கப்பட்ட ஜாதிக்காயின் பச்சைசதைப் பகுதி இரண்டு கிலோவை ஒரு ஜாடியில் போட்டு அத்துடன் இரண்டு கிலோ ஜீனி, நான்கு லிட்டர் கொதிக்க வைத்து ஆறவைத்து தண்ணீர், ஒரு சிட்டிகை ஈஸ்ட் மற்றும் ஒரு துணியில் பொட்டலமாகக் கட்டிய 50 கிராம் கோதுமை ஆகியவற்றைப் போட்டு ஜாடியை சுத்தமான துணியால் இறுக மூடவும். தினமும் ஒரு மரக்கரண்டி கொண்டு கரைசலைக் கிளறிவிட வேண்டும். இவ்வாறு செய்த 22 நாட்களுக்குப் பின் சுத்தமான மஸ்லின் துணியில் வடிகட்டி, சுத்தமான பாட்டில்களில் ஊற்றி வைக்க வேண்டும். பிறகு எடுத்து பயன்படுத்தலாம். இதில் நான்கு முதல் ஐந்து லிட்டர் ஒயின் கிடைக்கும்.

நன்றி : ஸ்பைஸ் இந்தியா – செப்டம்பர் 2014

தவுட்டாந்தழையின் மகிமை

எங்கள் ஊருக்கருகில் உள்ள கடற்கரை ஒட்டியுள்ள வனத்தில் தவுட்டாந்தழை (Grewia orientalis) என்ற மரம் உள்ளது. இதன் தழையை நாங்கள் வெள்ளாடுகளுக்குத் தீவனமாகக் கொடுக்கிறோம். இம்மரத்தின் தழையை சுமார் 1 மாதம் தொடர்ந்து கொடுத்துள்ளதால் ஆடுகளில் வளர்ச்சி கூடும். எடையும் அதிகரிக்கும் . இதுதவிர மிஷ்டத்தழை மற்றும் காட்டுத்துவரை இலையையும் அளித்தாலும் ஆடுகளின் வளர்ச்சி கூடும்.

எம்.பாக்கியம், ஏ.வி.எம்.சாலை. கோடியக்கரை அஞ்சல், வேதாரண்யம் தாலுகா, நாகை மாவட்டம்.

நாட்டு ஆடு பராமரிப்பு

நான் கடந்த 10 ஆண்டுகளாக நாட்டு ஆடு வளர்த்து வருகிறேன். 5 ஆடுகள் 1 கிடா வைத்துள்ளேன். ஆடுகளை மழைக்காலத்தில் வெளியே மேய்ச்சலுக்கு கொண்டு போக முடியாது. எங்கும் வெள்ளாமையாய் இருக்கும். நெல் அறுவடைக்குப் பின்னர்தான் தை மாதத்திலிருந்து ஆடி வரை மேய்ச்சலுக்கு ஓட்டிச்சென்று நன்கு பராமரிக்கலாம். குட்டிகளுக்கு பால் போதாததற்கு மாட்டுப்பால் தரலாம். ஆடுகளுக்குத் தீவனமாக 2 படி அரிசி மாவு, 1/4 படி கோதுமை மாவு சேர்த்து கஞ்சி போன்று காய்ச்ச வேண்டும். பின்னர் இத்துடன் 1 கிலோ எள்ளுப் பிண்ணாக்கு (ஊறவைத்தது) சேர்த்து அடர்தீவனமாக 5 ஆடுகளுக்கு கொடுக்கலாம். ஆடுகளின் வயிறு ஊதலுக்கு வெற்றிலை, இஞ்சி, பூண்டு சேர்த்து அரைத்து தரவேண்டும். நாட்டு ஆடுகள் வருடத்திற்கு 2 தடவை குட்டிபோடும். வெளியூர் இனங்களான டெல்லிசேரி, பீட்டல், சிரோகி போன்ற இனங்களை பராமரிக்க அதிக செலவு ஆகும். எனவே நாட்டு ஆடுகளைப் பராமரித்து வருமானம் எடுப்பதுதான் சிறந்த உத்தியாகும். ஆட்டுகொட்டகை அமைக்கும்சமயம் கொட்டில் முறைக்குப் பதிலாக தரைப்பகுதியில் சுமார் 1/4 அடி உயரமுள்ள பலகைகளை வைப்பதால் ஆடுகள் அதில் ஏறி அமர்ந்துகொள்ளும் . ஈரம் தாக்காது. ஆடுகளுக்கு கடலைக்கொடி, முருங்கைத்தழை, உதியன்தழை, வேப்பந்தழை, சவுக்கு தழைகளைத் தீவனமாகக் கொடுக்கலாம்.

தமிழ்செல்வி, வானவன்மகாதேவி, ஆர்.ஜெயலட்சுமி மீனவர் காலனி, காமேஸ்வரம். நாகை மாவட்டம்.

இராமநாதனின் இயற்கை வேளாண்மை

திரு. ராமநாதன் (வயது 50) செம்பனார் கோவிலை சேர்ந்தவர். ஐ.டி.ஐ. மெக்கானிக்கல் படித்திருக்கிறார். இவர் தனது 11 ஏக்கர் நிலத்தில் நெல் , பயறு , உளுந்து , தென்னை சாகுபடி செய்து வருகிறார். கடந்த 12 வருடங்களாக மூலிகை பூச்சிகொல்லி மருந்து தயார் செய்து இயற்கை வேளாண்மை கடைப்பிடித்து வருகிறார். மூலிகைபூச்சி விரட்டி தயாரிக்க தேவையான தாவரங்கள்

5 வகையான இலைகள் (குணம்) : கருப்பு தழைகள், துவர்ப்பு தழைகள், ஒடித்தால் பால் வரும் தழைகள். விலங்குகள் உண்ணாத தழைகள்: காரத்தன்மை உள்ள தழைகள், வேப்பிலை, காட்டாமணி இலைகள், நொச்சி, நுனா இலைகள்,ஆடாதொடை இலைகள், பிரண்டை இலைகள். மேற்கண்ட இலைகளை எடுத்து நன்றாக சிறிது சிறிதாக நறுக்கிக்கொள்ள வேண்டும். அனைத்து வகையான இலைகளை சமமான அளவில் எடுத்துக்கொண்டு அதில் கோமியம் 10 லிட்டர் மற்றும் 1 கிலோ சாணம் சேர்த்து அதன்பிறகு அதை 1 வாரத்திற்கு ஊறவைக்க வேண்டும். பின்பு வடிகட்டி நிலத்திற்கு தெளிக்க வேண்டும். 10 லிட்டர் தண்ணீர் அதனுடன் 1 லிட்டர் சாற்றை கலந்து தெளிக்கவேண்டும்.

பயிரில் தோன்றும் அஸ்வினி பூச்சிகளைக் கட்டுப்படுத்த

எருக்கு இலைகள் – 1 கிலோ , சீதா இலைகள் – 1 கிலோ கோமியம் – 10 லிட்டர் ,சாணம் – 5 கிலோ. அனைத்தும் நன்றாக கலந்து ஒன்றாக சேர்த்துகொள்ள வேண்டும். பிறகு ஒரு வாரத்திற்கு பின் அதனை வடிகட்டிய சாற்றை தனியாக எடுத்துக்கொண்டு அதனை பயிருக்கு 10 மடங்கு நீரில் சேர்த்து தெளிக்கலாம்.

பயிரில் பச்சைப் புழுக்களைக் கட்டுப்படுத்த

பச்சை மிளகாய் – 1/2 கிலோ, இஞ்சி – 1/2 கிலோ , பிரண்டை இலைகள் – 1 கிலோ , புகையிலை – 1/4 கிலோ மேற்கண்டவற்றை நன்கு இடித்து கோமியம் 10 லிட்டருடன் சாணம் 1 கிலோ கலந்து 1 வாரம் வைக்க வேண்டும் . பின்பு வடிகட்டி 10 லிட்டர் நீருடன் சேர்த்து பயிர்களுக்குத் தெளிக்க புழுக்கள் கட்டுப்படும்.

கொலைநோய், வாடல்நோய்க்கு

தேங்காய் துருவல் , மோர், இளநீர் . அனைத்தையும் ஒன்றாகக் கலந்து 10 நாட்களுக்குப் பிறகு அதனை பயிர்களுக்கு 10 மடங்கு நீர் சேர்த்து தெளிக்க வேண்டும்.

அரப்பு மோர் கரைசல்

அரப்பு இலைகளை அரைத்து மோர், இளநீர் அனைத்தையும் ஒன்றாகக் கலந்து 10 நாட்களுக்குப் பிறகு பயிர்களுக்கு அடிக்கலாம். பயிர்களை மஞ்சள் நோய் மற்றும் கொலை நோயிலிருந்து பாதுகாக்கும். 10 வருடங்களாக இவர் நிலத்திற்கு உரங்கள் போடுவதில்லை.

திரு. ராமநாதன்

நேருநகர், செம்பனார்கோவில், பரசலூர் (அஞ்சல்),

மயிலாடுதுறை, நாகபட்டிணம் மாவட்டம்.

செல் : 94428 20061

தொகுப்பு : ஜே. சிநேகிதா, ஜே. பியாரி

தேனாம்படுகை பாஸ்கரனின் இயற்கை வேளாண்மை

திரு. பாஸ்கரன் கும்பகோணம் தேனாம்படுகையை சேர்ந்தவர். இவர் 10 ஏக்கரில் இயற்கை விவசாயம் செய்கிறார். ஐந்து நாட்டு மாடுகள் வைத்து பராமரிக்கிறார். இவர் இயற்கை உரத்தை செரிவூட்டப்பட்ட உரமாக மாற்றியிருக்கிறார். மாட்டு சாணத்தை ஓர் இடத்தில் போட்டு தண்ணீரை சேர்த்து கொண்டு வருவார். ஒரு மாதம் சென்ற பிறகு மண்புழுக்கள் அதிலிருந்து உற்பத்தியாகும். இதனை பயன்படுத்தி மண்புழு உரம் தயாரிக்கிறார். தண்ணீரை சேர்க்கும் போது அதில் உள்ள மீத்தேன் வாயு வெளியேறி விடும்.

வளர்ச்சி ஊக்கி

தூய்மையாக வைக்கப்பட்ட கோமியம் அதனுடன் 10 கிலோ திராட்சை கலந்து 15 நாட்களுக்கு கலக்கிவிடவும். அது வளர்ச்சி ஊக்கியாக பயன்படுகிறது.

செரிவூட்டப்பட்ட உரம்

சாணம் மற்றும் கோமியம் இரண்டையும் ஒரு வாளியில் கலந்து வைக்க வேண்டும். இரண்டு நாட்களுக்குப் பிறகு அதில் வெல்லத்தைச் சேர்க்கவும். நொதித்தல் நடப்பதற்கு 2 நாட்கள் ஆகும். 2 நாட்களுக்குப் பிறகு அதில் பழங்கள், ரைஷோபியம் பாக்டீரியா, கடல்பாசி கலந்து கலக்கவும். பின் இரண்டு நாட்களுக்குப் பிறகு அது உரமாக மாறிவிடும். மொத்தம் 10 நாட்களில் இந்த திரவ உரத்தை 10 மடங்கு நீர் சேர்த்து வளர்ச்சிஊக்கியாகவும், பூச்சி விரட்டியாகவும் பயன்படுத்தலாம்.

இவர் பாதுகாத்துவரும் நெல் ரகங்கள் : மாப்பிள்ளை சம்பா, இலுப்பை பூ சம்பா, கருப்பு கவுனி, சிவப்பு கவுனி, வெள்ளைப்பொன்னி.

கே.பாஸ்கரன்

5/535, நடுத்தெரு, பட்டீஸ்வரம் (வழி) ,

தேனாம்படுகை, கும்பகோணம், செல் : 94428 71949

சீர்காழி பாலசுப்பிரமணியனின் உத்திகள்

திரு.பாலசுப்பிரமணியன் (வயது 60) சீர்காழியைச் சேர்ந்தவர். பியூசி. வரை படித்துள்ளார். இயற்கை விவசாய கூட்டுறவு சங்கத்தின் செயலாளராக உள்ளார். இச்சங்கத்தில் பாரம்பரிய நெல் வகைகளை சங்க உறுப்பினர்கள் பராமரித்து வருகின்றனர். இந்த நெல் வகைகளின் பெயர்கள் பின்வருமாறு : கருங்குறுவை, பூங்கார், குளக்கார், சிவப்புக்குறுவைகார் மற்றும் மாப்பிள்ளைசம்பா. அரிசியின் நிறம் சிவப்பு. இவ்வகை நெல்களில் விளையும் அரிசியை கொண்டு இயற்கை உணவுப்பொருட்களான வடகம், அப்பளம் மற்றும் மாவு போன்ற உணவுகளை தயாரிக்கின்றனர். இவர் கடைபிடிக்கும் இயற்கை வேளாண்மை முறைகள் பின்வருமாறு .

மீன் அமினோ அமிலம் தயாரிக்கும்முறை

ஒரு பாத்திரத்தில் 10 கிலோ மீன்களை எடுத்துக்கொள்ள வேண்டும். இதில் பாதி அளவு சர்க்கரை எடுத்து மீன்களின் மேல் போட வேண்டும். அதன்பின்பு தினமும் பாத்திரத்தை குலுக்க வேண்டும். பத்தாவது நாள் மீன்கள் சர்க்கரையுடன் சேர்ந்து திரவம் போன்று மாறிவிடும். இதனை 10 லிட்டர் நீருக்கு 100 மி.லி வீதம் கலந்து பயிருக்கு தெளித்து விட வேண்டும்.

நிலத்தில் எலிகளின் பாதிப்பை கட்டுப்படுத்த

நொச்சி இலை, காட்டாமணுக்கு இலை, ஆடாதொடை இலை, எருக்கு இலை, ஊமத்தை இலை, வேம்பு, புங்கம், பீக்களத்தி இவற்றை தலா 2 கிலோ அளவு ஒரு பாத்திரத்தில் எடுத்துக்கொண்டு அதனுடன் மாட்டுக்கோமியத்தை சேர்க்க வேண்டும். பின்பு தினமும் அதை கிளற வேண்டும். 10 முதல் 15 நாள் கழித்து இதில் 2 கிலோ சாணம் சேர்க்க வேண்டும். இதனால் நெடிய வாசனை உற்பத்தியாகும். பின்னர் 2 நாட்கள் கழித்து வடிகட்டி 11 லிட்டர் நீருக்கு 1 லிட்டர் கரைசல் சேர்த்து நெல் பயிருக்கு தெளித்தால் எலிகள் வராமல் ஓடி விடும். இதனை பார்த்து எங்கள் ஊரில் தாமோதரன் என்ற விவசாயியும் கடைபிடித்து அவரது வயலிலும் எலிகள் நடமாட்டமில்லை (10 அடி அகலமுள்ள கால்வாய் பாசன வாய்க்கால் கரைகளில் எலிகள் பொதுவாக காணப்படும்) என கூறினார்.

மோர் கரைசல்

15 லிட்டர் மோரை 13 நாட்கள் புளிக்க விட வேண்டும். இதனை 10 மடங்கு நீர் சேர்த்து செடிகளில் வளர்ச்சி ஊக்கியாக தெளிக்கலாம்.

எம்.எஸ். பாலசுப்பிரமணியன்
1/48, அகரம் தெரு. பாகசாலை அஞ்சல்.
சீர்காழி, நாகை மாவட்டம். செல் : 94427 06110

இயற்கை விவசாயி – திருவரசமூர்த்தி

திரு. திருவரசமூர்த்தி (வயது 50) மயிலாடுதுறையை அடுத்த கொடங்குடி என்னும் கிராமத்தில் வசித்து வருகிறார். இவர் 8வது வகுப்பு வரை படித்துள்ளார். இவர் ஒருங்கிணைந்த பண்ணையத்தை அமைத்து வருகிறார். இவரிடம் 23 ஏக்கர் நிலம் உள்ளது. இவர் அனைத்துவகையான விவசாயக் கருவிகளை வைத்துள்ளார். இவர் 50 கோழிகளை பராமரித்து வருவதோடு, மீன் குட்டையையும் அமைத்து மீன்களை வளர்த்து வருகிறார். கோழிகளின் எச்சத்தை மீன்களுக்கு இரையாக போடுகிறார். இவர் அனைத்துவகையான தோட்டக்கலை பயிர்களை பயிரிட்டு வருகிறார். இவரது நிலத்தில் ஐந்து ஏக்கர் அளவிற்கு மாம்பழ வகைகளான அல்போன்சா, பங்கனப்பல்லி, பெங்களூரோ, நீலம் ஆகியவற்றை பராமரித்து வருகிறார். இவர் வாழை வகைகளையும் பயிரிட்டு வருகிறார். இவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மாட்டு இனங்களை பராமரித்து வருகிறார். இயற்கை உரங்களான பஞ்சகவ்யா, அமிர்தக்கரைசல், ஜீவாமிர்தம் போன்றவற்றை தயார்செய்து நிலங்களில் பயன்படுத்தி வருகிறார்.

இவர் மண்புழு உரம், தேங்காய் நார் உரம் போன்றவற்றையும் தயாரித்து வருகிறார். தனது நிலங்களில் இது போன்ற இயற்கை உரங்களை பயன்படுத்தி வருகிறார். இவர் வயலின் மத்தியில் பாதை ஒன்று அமைத்துள்ளார். அதன்வழியே தெளிப்பான் பொருத்தப்பட்ட டிராக்டர் மூலம் பாதையின் இருபுறமும் பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு உரங்களை தெளித்து வருகிறார். 15 லிட்டர் கொள்ளவு கொண்ட தொட்டியில் ஜீவாமிர்தம் மற்றும் அமிர்தக்கரைசல்களை தனித்தனியே நிரப்பி வைத்துள்ளார். நிலத்தடி குழாயின் மூலம் ஜீவாமிர்தம் மற்றும் அமிர்தக்கரைசலானது விளை நிலத்திற்கு கொண்டு செல்லப்பட்டு தேவைக்கேற்ப தெளிக்கப்படுகிறது.

திரு. திருவரசமூர்த்தி
கொடங்குடி , மயிலாடுதுறை
செல் : 94432 20843

கழிவு சாக்கடை நீரை பயிருக்கு பயன்படுத்துதல்

தேனி மாவட்டம், இராசிங்காபுரம் கிரமத்தைச் சேர்ந்தவர் ஆர்.சிவக்குமார். இவர் கழிவு நீர் / சாக்கடைநீரை விவசாயத்திற்கு பயன்படுத்தி வருகிறார். ஐ.டி.ஐ. வரை படித்த இவர் இயந்திரங்களை பழுது பார்க்கும் பணிபுரிந்து வருகிறார்.தண்ணீர் தட்டுப்பாட்டால் பயிர் வெள்ளாமையைக் காப்பற்ற இவர் புதிய முறையை (குழாய் மூலம் கழிவுநீரை ஓரிடத்தில் தேக்கி பாசனம் செய்து வருகிறார்.

பண்ணைக்குட்டை ஒன்றை அமைத்துள்ளார். அதன் அருகிலே ஆழ்குழாய் அமைத்து அதன் மூலமும் நீரை அதில் தேக்கி கொள்கிறார். ஊரிலிருந்து வெளியேற்றப்பட்ட கழிவுநீரானது குழாய் மூலம் சேகரிக்கப்பட்டு பண்ணைக்குட்டைக்குள் கொண்டுவரப்படுகிறது. நிலத்தடிநீருடன் கழிவுநீரும் சேர்க்கப்படுகிறது. கழிவுநீரில் உள்ள திடக்கழிவுகள் நீக்கப்பட்ட பின்னரே பண்ணைக்குட்டையில் இருந்து நீரானது பயிர்களுக்கு பாய்ச்சப்படுகிறது. தற்பொழுது அவரது நிலத்தில் பொறியல்தட்டை, அவரை, கோவைக்காய், மிளகாய் பயிரிடப்பட்டுள்ளது. கடந்த மூன்று வருடங்களாக இம்முறையை பின்பற்றி வருகிறார்.

இதன்மூலமாக நிலத்தில் எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை என்பதையும், முன்பு இருப்பதைக் காட்டிலும் விளைச்சல் அதிகம் என்பதையும் குறிப்பிடுகிறார். இம்முறையின் மூலம் வருடம் முழுவதும் நீர் கிடைப்பதாக கூறுகிறார்.இருந்தும் களைகளின் எண்ணிக்கை அதிகம் என்பதையும் கூறுகிறார்.

ஆர்.சிவக்குமார்
த/பெ. எஸ்.ராஜரத்தினம்
50, சௌந்தம்மன் கோவில்,
இராசிங்காபுரம், தேனி மாவட்டம்.
செல் : 94862 08548

மோகன சுந்தரத்தின் கடலை பறிக்கும் இயந்திரம்

ஈரோடு மாவட்டம் நசியனூரை சேர்ந்த திரு. கே.மோகனசுந்தரம் (வயது 60) பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளார், இவரது மனைவி 'ஆத்மா' எனும் விவசாய அமைப்பில் மாவட்ட உறுப்பினராக உள்ளார்.

இவரது குடும்பம் பரம்பரையாக விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர்.



இவரது நிலத்தில் நெல் (பவானி சாகர்), வாழை, தீவனப்பயிர்கள் CO-3, CO-4, COFS-29, வேலிமசால், சவுண்டல் பயிர் செய்துள்ளார். மேலும் இவரிடம் மாட்டு இனங்கள் காங்கேயம்–3, கீர்–1, ஜெர்சி 1ம் உள்ளன, தலச்சேரி ஆடு ஐந்து வைத்து பராமரித்து வருகிறார். இவர் விவசாயம் மட்டுமின்றி பஞ்சகவியாவை தயார் செய்து விற்பனை செய்து வருகிறார். இவர் பஞ்சகவியாவை கேன்சர், சொரியாசிஸ், அல்சர், மூட்டு வலிக்கு உகந்தது என்று கூறுகிறார். பூச்சி விரட்டி எனும் மருந்தை தானாகவே தயார் செய்து தனது நிலங்களில் செடிகளுக்கு பயன்படுத்தி வருகிறார். பதினைந்து நாட்கள் கழித்து அதனை செடிகளுக்கு உபயோகிக்கலாம். 500 மி.லி. ஒரு கேன் (10 x 1 லிட் கொள்ளளவு) அளவுக்கு போதுமானது. புதிய கடலை பறிக்கும் இயந்திரத்தை கண்டுபிடித்துள்ளார். தனது சிறுவயதில் சைக்கிள் சக்கரத்தில் குச்சியை விட்டு உடைய வைத்து விளையாடுவாராம், பின்பு சிறிது நாட்கள் கழித்து ஒரு யோசனை அவருக்கு தோன்றியுள்ளது. அதாவது ஒரு கடலை சாகுபடியில் கடலை பறிப்பதற்கு 1 ஏக்கருக்கு குறைந்தது 40 கூலியாட்கள் தேவைப்படுகிறது. மேலும் பருப்பில் சேதம் அதிகமாக ஏற்படுகிறது என்று நினைத்து தன் சிறு வயதில் விளையாட்டின் மூலம் கற்ற அதாவது ஓடும் சக்கரத்தில் குச்சியை விட்டு ஒடியச்செய்வது என்ற அடிப்படை கருத்தை நினைவில் கொண்டு முதலில் ஓர் வெள்ளைத்தாளில் படம் வரைய ஆரம்பித்துள்ளார். பலமுறை சோதனை செய்து முடிவில்

படத்தை ஒரு முடிவிற்கு கொண்டுவந்தார். இயந்திரத்தை வடிவமைத்து அதனை இயக்க வைக்க 1/3 HP அல்லது 1/2 HP மோட்டாரை வயரின் மூலம் மின்சாரத்துடன் இணைத்துள்ளார். இந்த இயந்திரத்தில் ஃப்ளோயர் வேஸ்ட், ரோலர் என்ற இரு முக்கிய பாகங்களை வைத்திருந்தார். செடியை உள்ளே வைக்கும்பொழுது ரோலர் மூலம் செடி அடிக்கப்பட்டு கடலை தனியாக பிரிக்கப்பட்டது. கழிவுகள் ஃப்ளோயர் வேஸ்ட் மூலம் வெளியில் அகற்றப்பட்டன. இதனை கோபிசெட்டிபாளையம் மயிராடா கே.வி.கே. யிடம் காண்பித்துள்ளார். அவர்கள் இதில் கழிவுகள் அதிகமாக வெளிவருகின்றன என்பதை நினைவில்கொண்டு வேறொரு முழுமையான தெளிவான இயந்திரத்தை உருவாக்கியுள்ளார். இந்த இயந்திரத்திற்கு ஒரு நாளைக்கு 2–4 யூனிட் மின்சாரம் போதுமானது. இயந்திரத்திற்கு முழு வடிவம் கொடுக்க நான்கு மாதங்கள் ஆகின. இவர் இதுவரை நான்கு கருவிகளை விற்பனை செய்துள்ளார். கோபி மயிராடா கே.வி.கே. ஒன்று, கிருஷ்ணகிரி கே.வி.கே. ஒன்றும் வாங்கியுள்ளது. இவர் ரூ. 23.500/–க்கு விற்பனை செய்து வருகிறார். என்னவென்றால் இதற்கு அதிகமான கூலியாட்கள் தேவைப்படாது மற்றும் பருப்பில் சேதம் அடையாது. இவர் சைக்கிள் வீடர் தயார் செய்து ரூ. 2,700/–க்கு விற்பனை செய்து வருகிறார்.

திரு. கே.மோகனசுந்தரம்
12, திங்களூர் ரோடு,
அம்மன்கோவில் பின்புறம்,
நரியனூர், ஈரோடு ,
செல் : 94880 20646

ஜாலிஜார்ஜின் தோட்டக்கலை உத்திகள்

திருமதி. ஜாலிஜார்ஜ் (வயது 40) +2 வரை படித்துவிட்டு கணவனுக்கு துணையாக இருந்து வீட்டு பண்ணையை பராமரித்து வருகிறார். இவர்களது குடும்ப வருமானம் ரூ. 8,000/– ஆகும். இவர் மூலிகை வைத்யம் கற்றுக்கொண்டு இதனை பயிர்களுக்கும் கடைப்பிடித்து வருகிறார்.

நத்தையைக் கட்டுப்படுத்த

இவர் தனது தோட்டத்தில் நாற்றங்கால், பூ செடிகள், ஆர்க்கிட் தாவரங்களைப் பராமரித்து வருகிறார். இச்செடிகளில் நத்தைகள் மேய்ந்து இலைகள், பூக்களை சேதாரப்படுத்தும். இவர் தனது தாயிடமிருந்து தெரிந்துகொண்டார். இவரும் புதிதாக சோதனை செய்து பார்த்து கீழ்க்கண்ட முறையைக் கடைப்பிடித்து வெற்றி பெற்றுள்ளார். ஒரு பாத்திரத்தில் தென்னை நார்க்கழிவு (Coirpith)1/2 கிலோ, அடுப்புக்கரி 2 கிலோ எடுத்து இதில் சுடுநீர் 2 1/2 லிட்டர் ஊற்றி அரை மணி நேரம் அப்படியே விட்டுவிட வேண்டும். பின்னர் இதிலிருந்து வடித்த நீரை செடி வளர்க்கும் தொட்டியில் (மண்ணில்) ஊற்றிவிட செடிகள் நத்தை தாக்குதலிலிருந்து காப்பாற்றப்படும். நன்கு பூ எடுக்கும்.

மிளகாயின் காரத்தைக் கூட்ட

எந்த வெள்ளாமையும் செய்வதற்கு முன் பசுந்தாள் உரச்செடிகளை காட்டுப்பகுதியிலிருந்து கொண்டுவந்து அதனை நிலத்திலிட்டு மக்கவிடுவதால் நல்ல உரம் கிடைப்பதை யாவரும் அறிவர். ஜாலியின் முன்னோர்கள் காட்டுக் கொஞ்சி என்ற பண்ணைச்செடியின் தழையை வெட்டி கொண்டுவந்து மிளகாய் செடிக்கு உரமாகப் போட்டால் மிளகாயின் காரத்தன்மை கூடுவதைக் கண்டறிந்தனர். பண்ணைச் செடி தோண்டி எடுக்கப்பட்ட இடத்தில் வளர்ந்த மிளகாய் செடிகள் நல்ல காரமாக இருக்கும். ஜாலி இந்த உண்மையை தனது மிளகாய் செடி நடப்பட்ட 2 வாரத்தில் பண்ணைச் செடி தழையை பயிருக்கருகாமையில் வைத்து மக்கவிடுகிறார். இது 2 மாதங்களில் நன்கு மக்கிவிடும். பின்னர் மீண்டும் ஒன்று அல்லது இரு முறை இதே போல் இத்தழையை மிளகாய்த்தோட்டத்தில் பரப்பி மக்கவிட வேண்டும். இதனால் மிளகாய்ச்செடி நன்கு வளர்ச்சியடைவதுடன் இதில் கிடைக்கும் மிளகாயின் காரத்தன்மை மிக அதிகமாக கூடியிருக்கும்.

ஜாலிஜார்ஜ் , கொட்டகுப்பரத்து, தெக்கமலை,
இடுக்கி, கேரளா.

தேனீ – 25220, 25221 (ஏப்ரல் – ஜூன்'14)

சுனைப்புல்லு பாம்புக்கு ஏற்ற இடம்

நான் தாவரவியல் முடித்து விட்டு முனைவர் பட்டம் பெற்று கனடா நாட்டில் கெல்ப் பல்கலைகழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறேன். தமிழ் நாட்டில் பல பழங்குடி இன மக்கள் பகுதியில் சென்று அவர்களது தாவரங்கள் பற்றிய அறிவை தொகுத்து வருகிறேன். இதன்படி சுனைப்புல்லு காணப்படும் பகுதியில் நல்ல கதகதப்பான சூழல் உள்ளதால் அங்கு பாம்புகள் உள்ளதை அறியலாம். அஸ்ஸாம் பகுதியில் புரா மர இலையை (Streblus asper) தின்பதால் சர்க்கரைசத்து வெகுவாக குறைவாதகக் கூறுகின்றனர். இந்த மரத்தில் தான் நம் தமிழ் நாட்டில் மாடு கன்று போட்ட பின் வரும் இளங்கொடியை கட்டி தொங்கவிடுவார்கள். தாவரங்களை முறைப்படுத்தி அடையாளம் தெரிந்து கொள்ள கம்ப்யூட்டரில் மரபியல் முறையை உருவாக்கியுள்ளார் (DNA Barcodes to Biodiversity Applications)

ரகுபதி, கனடா கெல்ப் பல்கலைகழகம்
செல் : 09582186631, இமெயில் : ragu@uoguelph.ca

முளைத்த சோள விதைகளின் நாற்றுக்களை தீவனமாக வழங்குதல்

தேனி மாவட்டம், சில்லமரத்துப்பட்டி கிராமத்தைச் சேர்ந்தவர் திரு. எஸ்.வி.பி. வீரக்குமார். இவர் தனது மாட்டுக்கொட்டகையில் 10' x 8' என்ற அளவில் மண்ணில்லா தீவன வளர்ப்பு (Hydroponic) முறையை பின்பற்றி வருகிறார். இம்முறையை வலைத்தளங்கள் மூலமாக அறிந்த இவர் கடந்த ஒரு வருடமாக இதைப் பின்பற்றி வருகிறார். வருடம் முழுவதும் தீவனம் கிடைப்பதே இதன் சிறப்பம்சம் என்கிறார். இவர் சோளத்தை இம்முறையில் பயன்படுத்தியுள்ளார். இந்த முறையானது கீழே விவரிக்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட சோள விதைகளை (உடையாத, வளர்ச்சியடைந்த) 24 மணி நேரம் நீரில் ஊறவைக்க வேண்டும். பின்னர் நீரை வடிகட்டி சாக்கினால் மூடிவைக்க வேண்டும் (24 மணி நேரம்). விதையானது முளைக்க தொடங்கியிருக்கும். இவ்விதைகளை தட்டில் பரப்ப வேண்டும். ஒரு தட்டிற்கு 300 கிராம் அளவு மக்காச்சோள விதை போதுமானது. தட்டின் அடிப்பகுதியில் 12 ஓட்டைகள் போடுவதன் மூலம் நீர்தேக்கம் தவிர்க்கப்படுகிறது. இந்த தட்டானது (1 அடி அகலம் x 1 1/2 நீளம் x 3 அங்குல உயரம் உள்ள தட்டுகள்) தாங்கிகளின் மீது அடுக்கப்பட வேண்டும். அறையின் வெப்பநிலை, ஈரப்பதம் ஆகியவற்றை கட்டுப்பாட்டுடன் வைக்க வேண்டும். வெப்பநிலையானது 25°C ஈரப்பதம் 85°C ஆகவும் இருத்தல் வேண்டும். இரண்டுமணி நேரத்திற்கு ஒருமுறை நீர்த்தெளிப்பான் மூலம் நீர் தெளிக்க வேண்டும். 10 முதல் 20 செ.மீ. உயரம் மக்காச்சோளம் நாற்றுக்கள் வளர்ப்பதற்கு எவ்வளவு தண்ணீர் பாசனம் செய்கிறோமோ அதில் வெறும் 10% க்கும் குறைவான தண்ணீர் இருந்தால் அதே அளவு மகசூல் எடுக்க முடியும். ஒரு தட்டில் இருந்து 3 கிலோ அளவிலான தீவனம் எடுக்க முடியும்.

எட்டே நாட்களில் தீவனம் கிடைப்பதால் வருடம் முழுவதும் தீவனம் வளர்க்க முடியும். நாற்றுக்களின் வளர்ச்சி கூட்ட இதற்கு (Effective Micro Organism) திறன்மிகு நுண்ணுயிர் பயன்படுத்தலாம். இதற்கு ''செங்குத்து சாகுபடிமுறை'' என்றும் பெயருண்டு. இதை கொடுப்பதால் பால் உற்பத்தி அதிகரிப்பதோடு. மாடுகளின் ஆரோக்கியமும் கூடும்.

எஸ்.வி.பி. வீரக்குமார்
35, ஆசாத் வீதி,
சில்லமரத்துப்பட்டி–625 528.
போடி வட்டம். தேனி மாவட்டம். செல் : 97897 29002

லட்சுமணனின் இயற்கை பண்ணை

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகே திரு. லட்சுமணன் கடந்த இரண்டு வருடங்களாக இயற்கை வேளாண்மை செய்து வருகிறார். இவர் மக்காசோளம், சோளம் மற்றும் காய்கறி பயிர்கள் பயிர் செய்து வருகிறார். இதை தவிர நாட்டு பசுமாடுகள் (சாகிவால் , தர்பார்கார்) பராமரித்து வருகிறார். பசு மாட்டிலிருந்து இயற்கையான பால் , தயிர் எடுத்து விற்பனை செய்து வருகிறார்.

இயற்கை உரம் தயாரித்தல்

ஒரு ப்ளாஸ்டிக் ட்ரம்மில் சுமார் 100 லிட்டர் நீர் எடுத்து அதில் பூசணி 1 கிலோ , பப்பாளி 1 கிலோ , வாழைப்பழம் 1 கிலோ , வெல்லம் 1 கிலோ , நாட்டு கோழி முட்டை ஒன்று , கைப்பிடி மண் கலந்து விடுகிறார். இதனை மூன்று வாரம் புளிக்க விட வேண்டும். பின்னர் 50 லிட்டர் நீருக்கு 1 லிட்டர் நீர் சேர்த்து பயிர்களுக்கு பாய்ச்சுகிறார். (கிணறு நீரிலும் 10 லிட்டர் ஊற்றி விடுகிறார்). இதனை மாட்டு தொழுவத்திலும் நீரில் கலந்து ஊற்றுவதால் எந்த கெட்ட வாசனையும் வரமால் இருக்கும். இவர் திண்டுக்கல் அருகே உள்ள கோனூர் திம்மையா மூலம் நாட்டு மாடுகள் இனப்பெருக்கம் செய்து வருகிறார். இவர் தன்னுடைய தோட்டத்தில் சூபாபுல், வாகை , வேலிமசால் , வேம்பு போன்ற தீவன பயிர்கள் வளர்த்து மாடுகளுக்கும் , ஆடுகளுக்கும் தீவனம் அளிக்கிறார்.

என். லட்சுமணன்
3, பயோனியர் காலணி
வேதம் மருந்து கடை
திருமங்கலம்
மதுரை மாவட்டம் – 625 706
செல் : 9842194848

இலந்தைப்பழத்தில் நாட்டுரக பெரும்பழம்

இராஜஸ்தானில் ஜெய்சல்மீர் பகுதி பாலைவனப்பகுதியாகும். இங்கு மழை பொழிவு மிகவும் குறைவு. இப்பகுதியில் காட்டு இலந்தை மரங்கள் உண்டு. இந்த இலந்தையில் ஒரு மரம் பெரியளவு அதாவது சுமாரான கொய்யாப்பழம் அல்லது சிறிய ஆப்பிள் பழ அளவு கொண்ட இலந்தைபழங்கள் காய்க்கும் ஒரு மரத்தை திரு. திலுப்சிங் என்ற விவசாயி கண்டறிந்துள்ளார். இப்பழங்கள் 1 கிலோவிற்கு 6–7 எண்ணிக்கையிலுள்ளன. இந்தப்பழங்கள் அஹமதாபாத்தில் ஜனவரி 19– 22 ல் நடைபெற்ற உலகளாவிய அடித்தள கண்டுபிடிப்புகள் பற்றிய கருத்தரங்கில் வைக்கப்பட்டிருந்தது. இந்த இலந்தை மரத்திலிருந்து இனப்பெருக்கம் செய்து தனி இரகம் உருவாக்க இவர் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

திலீப்சிங் கலோத்
ஜெய்ப்பூர் , இராஜஸ்தான்
செல் : 09829704603

இயற்கை முறையில் செடி முருங்கை சாகுபடி

என்னுடைய அனுபவத்தில் செடி முருங்கை சாகுபடியில் கீழ்கண்ட இயற்கை வேளாண்மை முறைகளை கடைபிடித்து நல்ல வருமானம் எடுக்கலாம்.

71/2 அடி இடைவெளியில் நட வேண்டும். 37.5 சதுர அடியில் 1250 செடிகள் 1 ஏக்கருக்கு.

8X5 அடி இடைவெளியில் நட வேண்டும். 40 சதுர அடி ; 1090 செடிகள் 1 ஏக்கருக்கு ;

10X4 அடி இடைவெளியில் நட வேண்டும். 40 சதுர அடி. 1090 செடிகள் 1 ஏக்கருக்கு .

நடவு புரட்டாசி முதல் ஐப்பசி 10 வரை சரியான பருவம். பராமரிப்பு கவாத்து பயிர் வளர்ச்சி ஊக்கி தெளித்து பயிர் செய்தால் நட்ட 120 முதல் 125 நாளில் முதல் அறுவடை ஆரம்பம் ஆகும். காலத்தில் 90 முதல் 115 காய்கள் கிடைக்கும் கோடை இரண்டாவது பட்டம் 75 முதல் 90 காய்கள் கிடைக்கும் . சராசரியாக 180 முதல் 210 காய்கள் எடுக்கலாம். நல்ல ஊட்டம் பருவத்தோடு பராமரிப்பு செய்தால் காய் 1 க்கு 150 முதல் 230 கிராம் எடை வரும். ஏக்கர் 1 க்கு 1100 மரங்கள் . மரம் 1 க்கு 160 காய்கள் வீதம் எடை காய் 1 க்கு 150 கிராம் வீதம் சுமார் 23 கிலோ காய்கள் மரம் 1 க்கு கிடைக்கும்.

பஞ்சகாவ்யம் அமுதக்கரைசல் , மீன் அமினோ அமிலம், முட்டை அமினோ அமிலம் , தேமோர் கரைசல் , அரைப்பு மோர் கரைசல் , திற நண்ணுயிர், பூன் ஹெச்பி 101 மூடாக்கு , தொழு உரம், ஜிப்சம் முதலிய உரங்கள் இட்டால் காய் எடை 325 கிராம் வரை கொண்டு வரலாம்.

ஏக்கர் 1 க்கு மொத்த மகசூல் 25,300 கிலோ , கிலோ 1க்கு ரூ. 5 வீதம் விற்றால் வரவு ரூபாய் 1,26,500 , கிலோ ரூ. 10 வீதம் விற்றால் ரூ 2,53,000 கிடைக்கும். செடி முருங்கை நட்டு மகசூல் முடிந்த உடன் கவாத்து செய்து மீண்டும் காய்க்க வைக்கலாம். சுமார் 5 முதல் 6 வருடங்கள் மகசூல் எடுக்கலாம் .

பாசி பயறு, ஊடு பயிராக மகசூல் செய்து 3 முதல் 4 குவிண்டால் எடுத்தால் முன் சொன்ன எல்லா சாகுபடி செலவும், நிவர்த்தி செய்யப்படும். சிறந்த செடி முருங்கை விதை , அகத்திவிதை , வேலிமாசால்விதை கிடைக்கும். ஆடு வளர்ப்பு தீவனவளர்ப்பு , தொழு அமைப்பு சம்மந்தமான அனைத்து ஆலோசனைகளும் நீர் சிக்கன பராமரிப்பு , நிலவளம்காத்தல் மரம் வளர்ப்பில் புதிய உத்தி களுக்காக என்னுடைய முகவரியை அணுகலாம்.

பி. சின்னகேசவன்
சின்னமலைகுன்று அஞ்சல்
எட்டையாபுரம் தாலுகா
தூத்துக்குடி மாவட்டம் – 628902
செல் - 9842348915

கால்நடைகளுக்கான பசுந்தீவனங்கள்

கால்நடைகளுக்கான தீவனத்தில் பசுந்தீவனத்தின் பங்கு கால்நடைகளின் உற்பத்தி செலவில் 60–70 விழுக்காடு தீவனத்திற்காக மட்டும் செலவிடப்படுகிறது. அதிக அளவு பால் தரக்கூடிய பசுக்களை வைத்திருப்பவர்கள் அடர் தீவனத்தையே பெரிதும் நம்பியுள்ளனர். இதனால் உற்பத்திச் செலவு அதிகரித்து வருவாய் குறைகிறது. இந்த அடர்தீவன செலவை குறைத்தாலே கால்நடைப் பண்ணைகள் மூலம் அதிக இலாபம் பெற முடியும். ஆகவே இச்செலவைக் குறைக்க பிரதான மாற்று வழி பசுந்தீவனம் கொடுப்பதே. மேலும் நம் நாட்டில் கறவை மாடுகள் மற்றும் எருமைகளுக்கு அந்தந்த இடங்களில் கிடைக்கும். விவசாய உபபொருட்களான வைக்கோல், சோளத்தட்டை

, கம்புதட்டை, கடலைக்கொடி மற்றும் கரும்பு தோகை போன்றவைகளே பிரதான தீவனமாக கொடுக்கிறார்கள். இந்த உலர் தீவனங்களில் புரதம், தாது உப்புக்கள் மற்றும் உயிர்ச்சத்துகள் மிகக் குறைவாக உள்ளன. மேலும் இத்தீவனங்களில் நார்ச்சத்து அதிகமிருப்பதால் சீரணத் தன்மையும் குறைவு. ஆகவே உலர்தீவனங்களுடன் பசுந்தீவனங்களையும் கலந்து கொடுப்பது மிகவும் இன்றியமையாதது. பசுந்தீவனத்தின் வகைகள் : தானிய வகை– மக்காச்சோளம், சோளம் , கம்பு , ராகி , ஓட்ஸ் , திணை , சாமை . பயிறு வகை – குதிரைமசால், வேலிமசால், காராமணி, அவரை, கொத்தவரை, நரிப்பயிறு, சணப்பு, கொள்ளு , சங்குபுஷ்பம் , ஸ்டைலோ, சிராட்ரோ, செண்ட்ரோ, டெஸ்மோடியம் . புல் வகைகள் – நேப்பியர், கம்பு நேப்பியர் ஓட்டுப்புல், கினியாப்புல், எருமைப்புல் நீரடிப்புல் , பாராப்புல், ரோட்ஸ்புல் , ஆஸ்திரேலியாப்புல், கொழுக்கட்டைப்புல் , நீலகொழுக்கட்டைப்புல், மார்வல் புல், ஊசி புல், மற்றும் தீனாநாத்புல் . மர இலைகள் – அகத்தி, சுபாபுல், கிளைரிசிடியா, கொடுக்காப்புளி, ஆச்சா, முருங்கை, கல்யாணமுருங்கை, அரசு, வாகை , வேம்பு, மலைவேம்பு, வெள்வேல், கருவேல் , சீமைக்கருவேல், குடைவேல், ஆல், அத்தி , பலா, இலுப்பை, உதியன், பிளாரி, புளி, இலந்தை, முசுக்கொட்டை, வேங்கை, நாவல் , மஞ்சக்கடம்பு , நெல்லி.

தொகுப்பு : அ . யசோதா, மு. மலர்மதி, சி. வெண்ணிலா , வ.செ.வடிவு. உதவிப் பேராசிரியர்கள்
சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி
சென்னை – 600 007

மித தட்பவெப்ப நிலையில் வளரும் ஆப்பிள் இரகம்

ஆப்பிள் மரம் குளிர் அதிகம் காணப்படும் இமயமலை பகுதி, காஷ்மிர், சிம்லா, ஊட்டி, கொடைக்கானலில் வளரும் தன்மையுடையது. ஹிமாசல பிரதேசத்தில் ஹரிமன்சர்மா என்ற விவசாயி மிதமான குளிர் பிரதேசத்தில் (கடல் மட்டத்திலிருந்து 1800 அடிக்கு மேல் பகுதியில் அதிக குளிர் இல்லாமலும் உள்ள பகுதியில்) வளரும் ஓர் ஆப்பிள் இரகத்தை தேர்வு செய்துள்ளார். இந்த இரகத்திற்கு ஹெச்.ஆர்.எம். என் 99 என்ற பெயரிட்டுள்ளார். இந்த ஆப்பிள் இரகத்தின் சிறப்பம்மசங்கள்.

1) சராசரி மகசூல் – 1 குவிண்டால் பழங்கள் (12–13 வயதான மரத்திலிருந்து) 2) ஆப்பிள் மரம் நட்ட 3 வது வருடத்திலிருந்து ஜூன் மாதத்தில் அறுவடைக்கு வரும் 3) ஸ்கேப் என்ற சொறி நோய்க்கு (scab) தாக்குபிடிக்கும். இது வரை 2500 விவசாயிகளுக்கு 66000 கன்றுகளை ஹிமாசலபிரதேசம், ஆந்திரபிரதேசம், சர்நாடகா, குஜராத் , டெல்லி பகுதிகளில் விநியோகித்துள்ளார்.

நிலம் தயாரிப்பு

3x3 அடி குழி எடுத்து அதில் 10–20 கிலோ தொழுஉரம், நிலத்து மண், 25 கிராம் யூரியா, 15 கிராம் சூப்பர்பாஸ்பேட், 25 கிராம் மியூரேட்ஆப் பொட்டாஷ் இட வேண்டும். 5 லிட்டர் நீரில் 15 மி.லி குளோரிபைரிபாஸ் மருந்து கலந்து கரையான் தடுப்பிற்கு குழியில் ஊற்ற வேண்டும். (இதற்கு மாற்றாக இரசாயன உரத்திற்கு பதில் வேப்பம்பிண்ணாக்கு தூள் 100 கிராம், மண்புழு உரம் 1 கிலோ,இடலாம். கரையான் தடுப்பிற்கு சோற்றுக்கற்றாழை கன்று ஒன்று நடவு செய்யலாம்). கன்றுகள் டிசம்பரிலிருந்து பிப்ரவரி வரை நடவு செய்யலாம். ஒட்டுக்கட்டுப்பட்ட பகுதி தரைமட்டத்திலிருந்து 15–20 செ.மி. உயரத்தில் மேலே தெரியுமாறு இருக்க வேண்டும். நீர்பாசனம் மாதத்திற்கு 3–4 முறை நீர்ப்பாய்ச்சலாம். மழைக்காலத்தில் குழியில் நீர் தேங்காமல் வடிந்து விட சாய்வாக இருக்க வேண்டும்.

கவாத்து செய்தல் (Pruning)

நடவு செய்தபின் 2–3 அடி உயரத்தில் காவாத்து செய்ய வேண்டும். இதற்கு பின் ஒரு வருடம் சென்ற பின் 4–5 கிளைகளை மட்டும் விட்டு விட்டு மீதியை கவாத்து விட வேண்டும். இந்த 4–5 கிளைகளிலும் 2–3 அடி உயரம் விட்டு மீதி பாகத்தை கவாத்து செய்ய வேண்டும். "V" போன்ற வடிவமைப்பில் கவாத்து செய்வதால் குடை போன்ற வடிவம் மரத்திற்கு கிட்டும். உள்பகுதிகளில் கிளைகள் குறைவாக இருக்க வேண்டும். மரம் காய்க்க துவங்கும் காலத்தில் காப்பர் ஆக்ஸி குளோரைடு (2.5 மி.லி ஒரு லிட்டர் நீரில்) கலந்து தெளிக்க கேங்கர் என்ற நோயையும், டி.எஸ்.ஓ (10 மி.லி ஒரு லிட்டர் நீருக்கு) தெளிப்பது உகந்தது.

Harimam Sharma

விவசாயி மூலம் தேர்வு செய்யப்பட்ட இந்த ஆப்பிள் ரகமானது சேவா / தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை மூலம் கொடைக்கானல், வில்பட்டி , இடுக்கி இராஜகுமாரியிலும், மேட்டுபாளையம் ஊட்டி பகுதியிலும் சுமார் 200 கன்றுகள் விவசாயிகளுக்கு நட கொடுக்கப்பட்டுள்ளன– விவேகானந்தன், சேவா

கிரிஷி கீதா (மலையாள வேளாண்மை பாட்டு)

.....சென்ற இதழ் தொடர்ச்சி

யார் யார் வேளாண்மை செய்யலாம்: பெரியவர்களுக்கு மதிப்பளிப்பவனும், சத்தியத்தை கடைபிடிப்பவனும் வேளாண்மை செய்ய தகுந்தவன். போகவாழ்வில் ஈடுபடுவன், நேர்மையற்றவன், குடிகாரன் இவர்கள் வேளாண்மை செய்ய தகுதியற்றவர்கள். நிலத்திற்கு செல்லும் பாதை, எல்லைக்கோடுகளை உழுகக்கூடாது. மீறினால் அவர்கள் குடும்பத்தில் வறுமை தாண்டவமாடும்.

வாழை

கதளி, பூவன் , கதலிபூவன் இறைவனுக்கு படைக்கப்படும் இரகங்களாகும். குன்னன், வன்னானிருமுதிகுன்னன், காளி , ஏர நாடான், நேந்திரன் அட்டு நேந்திரன், கண்ணன், பொன்னன், நாடன், நீரன், பேயன், மொந்தன் ரஸ்தாலி போன்ற இரகங்களும் உள்ளன.

மேற்படி உரையை நிகழ்த்தும் சமயம் பரசுராமர் இறைவனை போற்றும் 12 சுலோகங்களைக் கூறி புகழ்ந்து மீண்டும் தன் உரையை தொடர்ந்தார். மாட்டு கொட்டகை அமைக்கும் சமயம் மாடுகளுக்கு பாதுகாப்பு அளிப்பதாக இருக்க வேண்டும். மாடுகளுக்கு இரவிலும் தீவனம் தர வேண்டும். நித்தமும் குளிப்பாட்டா வேண்டும். கலப்பை போன்ற உழவுக்கருவிகள் அவ்வப்போது பழுதுபார்க்கப்பட்டு வரிசையாக வைக்கப்பட மேண்டும்.

மழை பொழிவும் மன்னர்களின் தவ வாழ்வும்

கேரளாவின் வெளிப்பகுதியில் (தமிழ்நாடு) கார்த்திகை மார்கழி மாதங்களில் மழை பொழிகிறது. இம் மழை 5–8 நாட்கள் வரை இந்த இரண்டு மாதங்களில் பொழிந்தால் இது போதுமான மழை என்று சொல்லுவர் .இது ஓரிருநாள் மட்டுமே பெய்தாலும் திருப்தி அடைவர். ஆனால் மலையாள தேசத்தில் மழைக்கு பஞ்சமில்லை. மழையை பற்றிய வரலாறு அகஸ்திய சரித்திரத்தில் கூறப்பட்டுள்ளது.

பல நூற்றாண்டுகளாக பாரதத்தின் தென்பகுதியில் சேர, சோழ, பாண்டியர்கள் 15 ம் நூற்றாண்டு வரை ஆண்டு வந்தனர். சேர மன்னன் மலபார் , கோயம்புத்தூர் , கரூர் , சேலம் பகுதிகளை ஆண்டு வந்தான் . சோழன் கிழக்கு கடற்கரை பகுதியையும் பாண்டியன் தென் முனை பகுதியையும் ஆண்டு வந்தனர். இம்மன்னர்கள் தங்கள் ஆட்சியினால் மக்களை பாதுகாத்து நீடூழி வாழ்ந்தனர். இருப்பினும் மழை பொழிவு அவ்வப்போது பொய்த்து வந்ததால் இந்த குறையை எவ்வாறு நிவர்த்திக்க முடியும் என்று எண்ணினர். மழை குறைவுக்கு முக்கிய காரணம் இந்திரனுடைய இரக்கமின்மையே காரணம் என்ற முடிவுக்கு வந்தனர். இந்திரனை குறித்து கானகத்தில் தவம் செய்து இந்திரனுடைய தயவை பெற முயற்சிப்பதே ஒரே வழி என்று மூவருமே இதை ஏற்று கொண்டனர். மூவரும் அவரவர்களுடைய ராஜ்யத்தை தத்தம் அமைச்சர்களிடம் ஒப்படைத்து விட்டு வனத்திற்கு சென்று தவம் செய்ய சென்றனர். மூன்று மன்னர்களுமே முக்கோண வடிவில் அமர்ந்தனர். மனதில் இந்திரனை மட்டும் நினைத்து தியானத்தில் அமர்ந்தனர். இச்சமயத்தில் போக வாழ்க்கையை விட்டு ஊன் உறக்கமின்றி தவத்தில் அமர்ந்தது அனைவருக்கும் வியப்பை ஏற்படுத்தியது. இது முற்காலத்தில் விஸ்வாமித்திரர் இயற்றிய தவத்திற்கு ஒப்பாகும் என்று கூறப்பட்டது. இதனையை உணர்ந்த இந்திரன் தனது சக தேவர்களுடன் மூன்று மன்னர்களையும் பாராட்டி அவர்களுக்கு வேண்டும் வரங்களை கொடுக்க முன் வந்தார் . இந்திரன் மூன்று மன்னர்களுக்கும் தேவர்களுடன் தரிசனம் அளித்து அவர்களது வேண்டு கோளை கேட்டு அறிந்தார். மூன்று மன்னர்களும் இந்திரன் காலில் விழுந்து வணங்கி இறைவன் அருளால் உலகம் இயங்கி வருவதையும் உலகிலுள்ளோர் செழிப்பாக வாழ தங்கள் அருள் கிடைக்க வேண்டினர். தங்கள் நாட்டில் போதுமான மழை இல்லாததால் உயிர்கள் வாடுகின்றன. தானம் , தர்மம் செய்ய முடியவில்லை. பஞ்சத்தினால் பொருளுகளுக்கு விலையுமில்லை . இதற்கு அருள் கூர்ந்து உதவ வேண்டும் என்றனர்.

முன்பு ஒரு காலத்தல் அகஸ்தியர் முனிவர் மேற்கு தலைக்காவேரி என்ற மலை பகுதியை உருவாக்கி அங்கிருந்து காவேரி நதியை ஓடச்செய்தார். இதனால் சோழ மன்னனின் தேசத்திற்கு போதுமான நீர் கிடைத்தது. பின்னர் குற்றாலம் மலைப்பகுதியில் இவர் தவம் செய்த அகஸ்தியகூடா என்ற இடத்திலிந்து தாமிரபரணி நதி உற்பத்தியானது . இதனால் பாண்டிய நாட்டிற்கு போதுமான நீர் கிடைத்தது. சேர நாட்டிற்கு அவ்வப்போது பெய்யும் மழை நீரே போதுமனதாக இருந்தது. இதனால் மூன்று தேசங்களும் செழித்தோங்கின. இதனை கேட்ட இந்திரன் மன்னர்களை நோக்கி பின்வருமாறு கூறினான் . உங்களுக்கு புதிதாக நான்கு மாதங்களுக்கு தனி தனியாக மழை பொழிய ஏற்பாடு செய்கிறேன் . ஆனால் யார் யாருக்கு எந்த எந்த மாதங்களில் மழை தேவையோ அதை நீங்களே முடிவு செய்யலாம் என்று கூறினார். இதை வாசுதேவன் சாட்சியாக வரம் அளிக்கிறேன் என்று கூறி தேவர்களுடன் மறைந்து விட்டார். மூன்று மன்னர்களும் தங்களுக்கு எந்தெந்த மாதங்களில் மழை தேவைப்படுவதை கலந்து ஆலோசித்து முடிவுக்கு வந்தனர். இதன்படி சூரியன் மிதுனம் (ஆனி), கடகம் (ஆடி) , சிம்மம் (ஆவணி), கன்னி (புரட்டாசி) இராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது சேர நாட்டில் மழை பொழியும். துலாம் (ஐப்பசி), விருச்சகம் (கார்த்திகை), தனுசு (மார்கழி), மகரம் (தை) இராசிகளில் சூரியன் சஞ்சரிக்கும் பொழுது சோழ நாட்டில் மழை பொழியும் .

சூரியன் கும்பம் (மாசி), மீனம் (பங்குனி), மேஷம் (சித்திரை) , ரிஷபம் (வைகாசி), இராசிகளில் சஞ்சரிக்கும் பொழுது பாண்டியன் நாட்டில் மழை பொழியும்.

சோழ நாட்டு மன்னன் தனக்கு கிடைத்த 4 மாதங்களில் 2 மாதங்களை (கார்த்திகை , ஐப்பசி) சேர நாட்டு மன்னனுக்கு சேர்த்து கொடுத்தான் . பாண்டியன் தனக்கு கிடைத்த 4 மாதங்களில் சித்திரை , வைகாசி சேரனுக்கு திருப்பி கொடுத்தான் . இந்த மழைகளை முறையை கிழக்கன் மழை, எடமரி மழை என்று மலையாளத்தில் கூறுவார்கள்.

சேர மன்னன் தனது நிலப்பகுதியை விஸ்தீரனம் செய்து சேரமான் கல்பா என்று தனது தேசத்திற்கு பெயர் சூடப்பெற்றான் . சேர நாட்டின் புகழ் பூமி முழுவதும் பரவி நேர்மையான ஆட்சியினால் சேரனுக்கு சேரமான் பெருமாள் என்ற பட்டத்தையும் பெற்றார். இதனால் சேர நாட்டில் தொடர்ந்து மக்கள் சிரமப்படாமல் மகிழ்ச்சியாக வாழ்க்கையை நடத்துவார்கள். தான் (பரசுராமர்) இருக்கும் வரை தனது காலத்தில் சேர நாடு செழித்திருக்கும். இவ்வாறு அவதாரபுருஷர் பரசுராமர் அந்தனர்களுக்கு எடுத்துரைத்தார். (தொடரும்)

பாலக்காடு கால்நடை வைத்யம்

சென்ற நம் வழி வேளாண்மை (ஜூலை – செப்டம்பர் – 2014) இதழில் நான் பின்பற்றும் கால்நடை மூலிகை வைத்தியம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. இதில் சில பிழைகள் உள்ளன. இதனை கீழ்கண்டவாறு திருத்தி வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

மடிநோய்க்கு

தேவையான பொருட்கள்: கரு ஊமத்தை காய் 2 , சீந்தில் இலை பொடி, கறுப்பு எள்ளு விதை .

செய்முறை : ஊமத்தங்காய் நுனியை நறுக்கி விதை நீக்கி அதனுள் கறுப்பு எள்ளு விதையை நிரப்பவும். பின்பு காயின் நுனிப் பகுதியை மூடி சீந்தில் கொடி இலையை கொண்டு பொட்டலமாகக் கட்டவும். இக்காயை எடுத்து பாலில் போட்டு வேக வைக்கவும். நன்கு வெந்த பின்னர் அரைத்து பசை போல் செய்து வைக்கவும். பால் இல்லையென்றால் மட்டும் எள்ளு நிரப்பி சீந்தில் கொடி இலையில் பொட்டலம் கட்டிய ஊமத்தை காயை ஆவியில் வேக வைத்து எலுமிச்சை பழச்சாற்றை சேர்த்து அரைத்து பசையாக்கவும். மாட்டின் மடியை நன்றாக குளிர்ந்த நீர் கொண்டு கழுவி விடவும். மாட்டு காம்பில் உள்ள பாலை கறந்து வெளியேற்றவும். பின்னர் ஏற்கனவே செய்து வைத்துள்ள ஊமத்தங்காய் பசையை மாட்டின் மடி மீது தடவி விடவும்.

குறிப்பு :

இந்த பசையை 24 மணி நேரத்திற்குள் பயன்படுத்தி விடவும்.

சினை பிடித்த மாட்டிற்கு சாதாரண மடி வீக்கமாக இருந்தால்

தொட்டாற்சிணுங்கி செடியை வேருடன் எடுத்து தண்ணீர் விட்டு அரைத்து பசைபோல் செய்து வீக்க முள்ள இடத்தில் தடவி விடவும். மடியில் இரத்தக் கொப்பளம் இருந்தால் கிளிசரின் கலந்து பசை போல் செய்து தடவலாம். (அல்லது) சோற்றுக் கற்றாழையுடன் பச்சை மஞ்சள் சேர்த்து அரைத்து சுண்ணாம்பில் கலந்து தடவலாம்.

வயிறு உப்பிசத்திற்கு

விளக்கெண்ணெய் – 100 மி.லியை வெது வெப்பான நீர்100 மி.லி யுடன் ஊற்றி நன்கு நுரை வரும் வரை கலக்கவும். இதனை 4 மணி நேரத்திற்கு ஒரு முறை இவ்விதம் கலந்து கொடுக்கவும். புங்க மரத்துப் பட்டை – 200 கிராம் எடுத்து 1 லிட்டர் தண்ணீரில் சேர்த்து கொதிக்க விட்டு. ஒரு லிட்டரானது 500 மி.லி வரும் வரை வற்ற வைக்கவும். பின்னர் இதனுடன் சோடா உப்பு 10 கிராம் சேர்த்து கலக்கவும். இதனை 6 மணி நேரத்திற்கு ஒரு முறை கொடுக்கவும். கடலை எண்ணெய் , டர்பென்டைன் எண்ணெய் ஒவ்வொன்றும் 100 மி.லி சேர்த்து நுரை வரும் வரை கலக்கவும். இதனை 2–4 மணி நேரத்திற்கொரு முறை கொடுக்கவும்.

மூலிகை குடற்புழு மருந்து

அரை டம்ளர் மோரை அரை டம்ளர் தயிருடன் கலந்து 24 மணி நேரம் வைக்கவும். பின்னர் இதனுடன் 5–6 டம்ளர் தண்ணீர் கலந்து 2–6 டம்ளர் காலையில் 3–5 நாளைக்கு மாட்டிற்கு கொடுக்கலாம். தண்ணீர் விட்டான் கிழங்கை 1 கைபிடி எடுத்து அரைத்து 2–6 டம்ளர் தண்ணீரில் சேர்த்து கலக்கவும். இதனை காலை வேலையில் 2–6 டம்ளர் 3–5 நாளைக்கு கொடுக்கலாம்.

தோல் நோய்க்கு

புங்கம் பட்டையை அரைத்து இதனுடன் புங்கன் விதையெண்ணெயில் கலந்து உடலின் மேல் பூச்சாக பூசவும். மஞ்சள் பவுடர் 10 கிராம், தொட்டாற்சிணுங்கி இலை 50 கிராம் , சேர்த்து அரைத்து 100 மி.லி வேப்பெண்ணெயில் கொதிக்க வைக்கவும். பின்னர் இதனை எடுத்து மேல் பூச்சாக பூசலாம். எருக்கம்பாலை மேலே தடவ வேண்டும். வெப்பாலை இலை 1 கிலோ அளவு எடுத்து ஒரு பெரிய பாட்டிலில் போட்டு அதனுள் 1 லிட்டர் தேங்காயெண்ணெயை ஊற்றி மூடி விடவும். இதனை சூரிய ஒளியில் சுமார் 7 நாளைக்கு வைக்கவும். 7 நாட்கள் முடிந்த பின்னர் பாட்டிலில் கருநீல கலரில் எண்ணெய் இருப்பது தெரியும். இந்த எண்ணெயை இன்னொரு பாட்டிலில் எடுத்து ஊற்றவும். வெப்பாலை இலையை அரைக்கவோ நறுக்கவோ கூடாது. இந்த எண்ணெயை எடுத்து மாட்டின் தோல் வியாதி உள்ள இடத்தில் தடவலாம்.

மாட்டிற்கு மூச்சுத் திணறல்

தேவையானவை : துளசி – 100 கிராம், சுக்கு – 50 கிராம் , மிளகு – 10 எண்ணம், வெற்றிலை – 5 எண்ணம் , கிராம்பு – 5 எண்ணம் மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து இதனுடன் 100 கிராம் வெல்லம் மற்றும் 250 மி.லி தண்ணீர் சேர்த்து கொதிக்க வைக்கவும். இதனை 100 – 250 மி.லி அளவு எடுத்து ஒரு நாளைக்கு 2–3 வேளை கொடுக்கலாம். மல்லி – 250 கிராம், துளசி – 50 கிராம், கருப்பட்டி அல்லது வெல்லம் – 50 கிராம் , பூண்டு – 25 கிராம், சூடம் – 5 கிராம், மிளகு 10 எண்ணம் . மேற்க்கண்ட அனைத்தும் சேர்த்து சாறு எடுத்து ஒரு நாளைக்கு 2 வேளை கொடுக்கலாம்.

வாய்க்காணை மற்றும் கால் காணைக்கு

பப்பாளிபழம் அரைத்து இதனுடன் தேன் கலந்து மாட்டின் வாய் , நாக்கு , உதடு பகுதிகளில் தடவலாம். வேப்பெண்ணெயில் சூடம் சேர்த்து கொதிக்க வைத்து கால் குளம்புகளில் தடவலாம். வாழை இலையை அனலில் காட்டி அதன் மேல் பன்றியின் கொழுப்பு உறுக்கிய எண்ணையை வைத்து உள்ளே கொடுக்க வேண்டும்.

ரொபஸ்ட்டா வாழைப்பழத்தை பன்றியின் கொழுப்பு உருக்கிய எண்ணெயில் கலந்து தர வேண்டும். தேக்கு மர எண்ணெயை கால் குழம்புகளிலுள்ள புண்களுக்கு போடலாம்.

புழு வைத்த புண்ணிற்கு

சீத்தா இலை அல்லது பிஞ்சு காயை அரைத்து பசை போல் செய்து புழு வைத்த புண்ணில் வைத்து கட்டி விடவும்.

டி. தனபாலன்
குளிர்மா, அய்யப்பன் காவு
காடாம்கோடு
கரிஸ்கரப்புள்ளி அஞ்சல்
பாலக்காடு – 678551
செல் : 09400600589

பறவைகளுக்கு தானியம் தரும் கிராமங்கள்

குஜராத் மாநிலத்தில் 11 மாவட்டங்களில் 186 கிராமங்களில் நடைபெற்ற கணக்கெடுப்புபடி அங்கு 164 கிராமங்களில் “சுபதரஸ்” அமைக்கப்பட்டுள்ளன. சபுதரஸ் என்பது பறவைகளுக்கு தானியமிடும் திடலாகும். ஒவ்வொரு கிராமத்திலும் கிராம மக்கள் உதவியால் அல்லது சில தனி நபர் நன்கொடை மூலம் கட்டப்படுகின்றன. பனஸ்கந்தா, சபர்கந்தா, ஆனந்த் மாவட்டங்களில் அங்கு காணப்படும் பறவை தானிய திடல்களின் விவரங்கள் சில கொடுக்கப்பட்டுள்ளன.

கட்டுமானம்

பறவைத்திடல்கள் பல நூற்றாண்டுகளாக பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்படுகின்றன. புதிதாக பறவைத்திடல்கள் கட்டுமானம் முன்பு போல் தற்சமயம் கட்டப்படுவதில்லை. கடந்த 15 ஆண்டுகள் வரை இந்த பழக்கம் இருந்து வந்தது. தற்சமயம் ஊர் பஞ்சாயத்து கவுன்சிலர் , தலைவர் நிதி , தொண்டு நிறுவனம் மூலம் கட்டப்படுகின்றன.

தானியங்கள் சேகரித்தல்

குழந்தை பிறப்பு , கல்யாண நாள் அல்லது கருமாதி நாட்களில் தானியங்களை மக்கள் பறவைகளுக்கு வழங்கும் வழக்கம் உண்டு. பட்டம் பறக்கப்படும் நாட்களில் பறவைகளுக்கு தானியம் தருதல் புண்ணியமான செயல் என அன்று அதிகமாக வழங்குவர். தெருக்கூத்து, பஜனைபாடல் மூலம் வீடுவீடாக சென்று தானியம் வாங்குவதலும் நடைபெற்று வருகிறது. பிரபாத் யாத்ரா எனப்படும் பெண்கள் பஜனைபாட்டு ஊர்வலம் சில ஊர்களில் நடைபெற்று வருகிறது. இச்சமயத்தில் தானியங்களை வீடு வீடாக சேகரிப்பார்கள். சில கிராமங்களில் சிலர் தப்பு செய்து விட்டால் பஞ்சாயத்திற்கு அபராதமாக தானியம் தர வேண்டும். இதை அப்படியே பறவைகளுக்கு தீவனமாக எடுத்துக் கொள்வர். தானியங்கள் கோதுமை, கம்பு , சோளம், மக்காச்சோளம் சேகரிக்கப்படுகிறது.

சபுதரஸ் பராமரிப்பு

பறவைக்கு தீனி தரும் திடல் அவ்வப்போது சுத்தம் செய்ய சில தன்னார்வ இளைஞர்கள், பள்ளி மாணவர்கள் செயல்படுகின்றனர். தீபாவளி பண்டிகை நாளன்று இத்திடல்கள் சுத்தம் செய்யப்பட்டு அலங்கரிக்கப்படுகின்றன. இந்த திடல்களில் பறவை தீனி எடுக்கும் இடம் சாணி, மண் சாந்து கலந்து மெழுகி விடப்பட்டுள்ளது. இதனால் தானியங்களை கொத்தும் சமயம் அலகிற்கு எந்த காயமும் வந்து விடக் கூடாது என்பதற்காகவே சிமெண்ட், கல் தரையில் அலகிற்கு சேதம் ஏற்படுவதால் இந்த முறையை கடைபிடிக்கின்றனர். இந்த திடலில் தானியங்களை சேமித்து வைக்கவும் இடம் உண்டு. சில கிராமங்களில் சிறுவர்கள் இந்த தானியத்தை திருடி சென்று கடைகளில் விற்று விடுவதால் தானியம் சேமிக்கும் இடம் எல்லோர் கண்களிலும் படும் பொது இடத்தில் வைத்து திருட்டை தவிர்க்கின்றனர். தீனி தரும் திடல் மரங்களுக்கு அருகேயிருந்தால் பூனை , நாய்

வந்துவிடும் என்பதற்காக உயரமாக அல்லது மரம் அருகாமையிலில்லாமலும் பார்த்துக் கொள்கின்றனர். இந்த பறவை திடல்களை சுத்தம் செய்யும் நாட்களில் தங்கள் வீட்டு மாடி அல்லது பால்கனியில் தீனி இடுவர். வறட்சியான கிராமங்களில் ஏழ்மையான மக்கள் வசிக்கும் கிராமங்களில்தான் இந்த பறவை திடல்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

தேனீ: ஏப்ரல் –ஜூன் 2014

காலி பாட்டில் மூலம் பறவைகளுக்குத் தீனி

குஜராத் மாநிலத்தில் ஜூனாகட் மாவட்டத்தில் கேசாட் கிராமத்தில் வசித்து வரும் அர்ஜுன்பாய் ஒரு விவசாயி. இவர் பல கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளார். அண்மையில் காலி பிளாஸ்டிக் பாட்டிலில் துளைகளிட்டு அதில் கம்பு, சோளம் தானியம் நிரப்பி பறவைகள் கொத்த விடுகிறார். இம்முறையில் தானியங்கள் சிதறி வேஸ்ட் ஆவதில்லை. இதன்படி ஒரு லிட்டர் பிளாஸ்டிக் பாட்டிலை எடுத்து அடிப்பகுதியில் ஒரு துளையிடுகிறார். பக்கவாட்டில் 10–12 துளைகள் இடுகிறார். அடிப்பகுதி துளையில் போல்ட் கொண்டு ஒரு தட்டுடன் இணைத்து விடுகிறார். இந்த போல்ட் ஐ உள்ளே நுழைக்க சுமார் 11/2 அடி உயர இரும்பு கம்பி ஒன்றை உபயோகிக்கிறார். இதன் கீழ்முனை திருப்புளிபோன்று திருகலாம். மேல் முனையில் லேசாக ''உ'' போன்று வளைத்துள்ளார். இந்த வளைவின் மூலம் போல்ட்டை பிளாஸ்டிக் பாட்டிலின் கீழ் கொண்டு சென்று நுழைத்து விடலாம். கம்பியின் கீழ் முனையிலுள்ள திருப்புளி போன்ற பகுதி கொண்டு தட்டுடன் இணைத்து விடலாம். பின்னர் இந்த பாட்டிலில் கம்பு தானியத்தை நிரப்பலாம். பக்கவாட்டிலிலுள்ள துளை வழியாக ஓரிரண்டு தானியங்கள் விழும். அவ்வப்போது இந்தப்பாட்டில் அசைக்கப்பட்டால் தானியங்கள் சிந்தும். இந்த உத்தி மூலம் பறவைகள் பாட்டிலைக் கொத்த கொத்த துளை வழியாக தானியம் சிந்தும். இதனை பறவைகள் சிதறாமல் தின்றுவிடும். இதை சுமார் 600 க்கும் மேற்பட்ட நபர்களுக்கு இலவசமாகக் கொடுத்து பறவைகளுக்கு தீனி அளிப்பதை ஊக்குவித்து வருகிறார்.

நாட்டுமாடு பண்ணை மூலம் சமுதாயப்பணி



மகாராஷ்டிரா மாநிலத்தில் துலே மாவட்டத்தில் திரு. சுரேஸ் வனஸக்கர் (50) மருத்துவப் பட்டம் முடித்து கடந்த 22 வருடங்களாக சொந்தமாக மருத்துவமனை வைத்து மருத்துவராகப் பணியாற்றி வருகிறார். இவர் தனது ஓய்வு நேரத்தில் விவசாயப்பண்ணை ஆரம்பித்து கவனம் செலுத்த விரும்பினார். இதன் மூலம் அப்பகுதி கிராமமக்களுக்கும் வேளாண்மையை நவீனகரமாக்கி விவசாயிகளின் வருமானத்தைக் கூட்டும் எண்ணத்திலிருந்தார். இவர் 12 ஏக்கர் நிலத்தை வாங்கி அதில் விவசாயம் செய்ய ஆரம்பித்தார். விவசாயத்தை மட்டும் நம்பியிருக்கும் சமயம் அவ்வளவாக வருமானம் கிடைக்காதலால் கால்நடை வளர்ப்பை இணைத்து செயல்பட்டார். முதலில் ஆட்டு பண்ணை உருவாக்கினார். இதில் நல்ல பயிற்சியும் எடுத்துக் கொண்டார். இரண்டு ஆண்டுகளாக ஆட்டுப் பண்ணையில் ஆட்டு பராமரிப்பு செலவு அதிகமாகி வருமானம் ஈட்ட முடியவில்லை. இதனால் ஆட்டு பண்ணையை மூடி விட்டு கோழிப்பண்ணை துவங்கி 150 கோழிகள் வளர்த்தார். கோழிப்பண்ணையை பராமரித்து லாபம் ஈட்டாத நிலையில் ஒரே வருடத்தில் மூடி விட்டார். பின்னர் மீன்பண்ணை, எருமை மாட்டு பண்ணை வைத்து இதே காரணங்களினால் இவைகளையும் மூடி விட்டார். இவரிடம் வேலை

செய்பவர்கள் விஸ்வாசத்தோடும், உழைப்பாளிகளாகவும் இல்லாமலிருந்ததையும் பார்த்து மனமுடைந்தார். இச்சமயத்தில் இந்தப் பகுதியில் சுத்த நாட்டு மாடான கிலாரி கன்றுகள் வாங்க விவசாயிகள் ஆர்வம் காட்டியதை வைத்து கிலாரி மாட்டு பண்ணை ஒன்றை 2006 ல் துவங்கினார். 5 கிலாரி பசுமாடுகளுடன் ஒரு காளையை பண்டரிபுரம் சந்தையில் வாங்கி வந்து வளர்த்தார். 2010 ல் 32 மாடுகளானது. இது வரை 28 கன்றுகள் விற்று நல்ல லாபம் எடுத்துள்ளார். இப்பகுதியில் 200 க்கும் மேற்பட்ட பசுக்களுக்கு சுத்தமான கிலாரி காளை மூலம் இலவசமாக இனப்பெருக்கம் செய்ய உதவியுள்ளார்.

Dr. Suresh S. Vasaikar
Yashoda Balrugnalaya
Opp. Santhoshi Mata Mandir
Sakri Road. Dhule - 424 001
Maharashtra ,Cell - 9823170654

கால்நடை மூலிகை வைத்திய அனுபவம்

என்னுடைய கால்நடை மூலிகை வைத்திய அனுபவம் குறிப்பாக மடிநோய்க்கு வைத்திய முறை சேவா மூலம் நம் வழி வேளாண்மை , புதிய தலைமுறை பத்திரிக்கைகளில் வெளியிடப்பட்டது. இதனை பல விவசாயிகள் படித்து பார்த்து விட்டு எங்கள் ஊருக்கே வந்து கால்நடை மூலிகை வைத்திய முறையை முழுதும் தெரிந்து கொண்டு சென்றுள்ளனர். இது வரை 250 நபர்கள் எங்களை தேடி வந்தது ஆச்சிரியத்தை அளிக்கிறது. சிலர் மாடுகளுடன் நேரடியாகவும் வந்தனர். தமிழ்நாட்டிலும், கேரளாவிலும் கால்நடை மூலிகை வைத்தியத்தை தெரிந்து கொள்ள மிக்க ஆர்வம் கொண்டுள்ளனர். அவர்களுக்கு மூலிகை செடிகளை காண்பித்து மடிநோய்க்கு வைத்தியம் செய்யும் முறையை விளக்கமாக எடுத்து சொல்லியுள்ளேன்.

ந. கோவிந்தன்
முருகன் கார்டன்ஸ் , இந்தியன் பேங்க் எதிர்புறம்
அயோத்திய பட்டிணம் , வாழப்பாடி தாலுகா
சேலம் மாவட்டம் – 636103 , செல் : 9364222098

சோளத்தில்சுடுமல்லிபுல்லுருவியை தவிர்க்க

சோளப்பயிரில் வேருடன் இணைந்து வரும் புல்லுருவியை சுடுமல்லி (striga) என்று கூறுவர். சோளப்பயிரிலிருந்து ஊட்டச்சத்தை உறிஞ்சி உயிர் வாழும் . இதனால் சோளப்பயிரின் வளர்ச்சி குன்றிவிடும். இதற்கு முதல் போகம் வெங்காயம் சாகுபடி செய்து பின்னர் சோளம் நட்டால் அல்லது சோள விதைகளுடன் வெங்காய சருகுகளை கலந்து விதை நேர்த்தி செய்து நட்டாலும் புல்லுருவியைக் கட்டுப்படுத்தலாம். இதனை ஆப்பிரிக்காவில் வட கானா நாட்டிலுள்ள ரன்மணி அபிபிலி என்ற விவசாயி கடைபிடித்து வந்தார். இதனை பார்த்து மேலும் 50 விவசாயிகள் இந்த உத்தியை கடைபிடித்து பயனடைந்தனர் – ஜஸ்டிஸ் டாம்போ , ஜெர்மனி
இமெயில் : tobias.wuenscher@uni-bonn.de

பாக்கு மட்டைதட்டு தயாரிக்கும் இயந்திரம்

நாமக்கல் மாவட்டம் நாமகிரி பேட்டை அருகேயுள்ள பச்சுடையாம் பாளையம் கிராமத்தில் எம். சின்னக்கண்ணு (50) என்ற விவசாயி பாக்கு மட்டையிலிந்து தட்டு தயாரிக்கும் இயந்திரம் (ஹைட்ராலிக் மாடல்) உருவாக்கி தட்டு தயார் செய்து வருகிறார். இந்த மெஷினின் விலை ரூ. 2,200,00 ஆகும். இவர் இது வரை சுமர் 190 மெஷின் தயார் செய்து பாண்டிச்சேரி , சென்னை , திருச்சி , தஞ்சாவூர் போன்ற இடங்களுக்கு விற்பனை செய்துள்ளார். பாக்கு தட்டு சைஸ் 4 இன்ச் லிருந்து 12 இஞ்ச் வரை செய்யலாம். இந்த இயந்திரத்தில் 1 நாளைக்கு (8 மணி நேரம்) சுமார் 1700 தட்டுகள் வரை தயார் செய்யலாம். பழைய முறையில் 1500 தட்டுகள் மட்டுமே உற்பத்தி செய்ய முடியும். கடந்த ஆண்டு இவருக்கு தேசிய கண்டுபிடிப்பு அறக்கட்டளை அகமதாபாத்திலிருந்து இந்த கருவியை மேம்படுத்த ரூ. 2 லட்சம் நிதி உதவி கிடைத்தது. தேவையானவருக்கு பாக்கு மட்டைகளும் கொள்முதல் செய்து கொடுக்கிறார். இவரது கருவி மற்றும் மேலும் விவரங்களுக்கு

எம். சின்னக்கண்ணு
த/பெ. ஆர். முத்துச்சாமி
சி.எஸ்.எல் லேத் ஒர்க்ஸ்
டி. பச்சுடயம் பாளையம்
நாமகிரிப் பேட்டை , ராசிபுரம் தாலுகா
நாமக்கல் – 637 406 , செல் : 9787034139

நாட்டு நெல்லுக்கு மருத்துவ குணம்

நாங்கள் 8 நாட்டு ரகங்களிலுள்ள மருத்துவம் மற்றும் சத்து குணத்தை சோதித்தோம். இதில் தெரிய வந்துள்ள முடிவுகள்: மாப்பிள்ளை சம்பா கார்போஹைட்ரேட் (மாவுத்சத்து), நார்ச்சத்துக்கு சிறந்தது. பெருங்கார், கருங்குறுவை, குள்ளகார் புரதச்சத்து நிறைந்தது. கருங்குறுவை இரும்புச்சத்து அதிகம் உடையது. நீலச்சம்பாவில் சுண்ணாம்பு சத்து அதிகம் உள்ளதால் பால் கொடுக்கும் தாய்மார்களுக்கு சிறந்தது. குள்ளகாரு, கௌனி, கருங்குறுவை, காலாநமக்கில் சர்க்கரை சத்தை குறைக்கும் தன்மை (glycine index) உள்ளதாக அறியப்படுகிறது.

ஏ. வி . பாலசுப்ரமணியன்
சி.ஐ.கே. எஸ், 30 ,
காந்தி மண்டபம் ரோடு
கோட்டூர்புரம்,
சென்னை – 85
தொலைபேசி : 044 – 24471087/5862
தகவல் : ஏபீசி மின்னஞ்சல் குழு

முல்லை திணை பாடல்களும் ஆயர் குடியும்

நான் சென்னைக் கிறித்தவக் கல்லூரித் தமிழ்த்துறையில் முனைவர் பாலுசாமி மேற்பார்வையில் முனைவர் பட்ட ஆய்வு மேற்கொண்டு வருகிறேன். ''முல்லைத் திணைப் பாடல்களும் ஆயர் வாழ்வியலும்'' என்பது என்னுடைய ஆய்வுத்தலைப்பு சங்க இலக்கிய ஆயர்களின் வாழ்வியல் தொடங்கி தற்காலத்தில் அவர்களது பழமையான வாழ்க்கை முறையை கள ஆய்வு மூலம் மானிடவியல் நோக்கில் ஆய்வு செய்வதே எங்களுடைய நோக்கம். கால்நடைகள் பெருமளவு வைத்திருப்போர் வாழும் பகுதிக்கு நேரடியாக சென்று கள ஆய்வு மேற்கொண்டு வருகிறேன். இரண்டு வாரங்கள் மதுரை நாகமலை புதுக்கோட்டையில் களப்பணியிலிருந்தேன். நெல்லையில் உள்ள குறுங்குடிக்குக் களஆய்வுக்காக செல்ல உள்ளேன் . இது தொடர்பான தகவல்களைத் தந்தும் அல்லது தகவல்கள் பெறும் வழியைக்காட்டியும் உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

சா. கருணாகரன்
8122557548 / 9600099477

(தாங்கள் சிவகங்கை மாவட்டத்தில் புலிக்குளம் கிடைமாடுகள் பராமரித்து வரும் திரு. ராமகிருஷ்ணனுடன் (செல் : 9626043257) தொடர்பு வைத்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். – ஆசிரியர்)

புதிதாக களைவெட்டும் கருவி

நான் கடந்த 5 ஆண்டுகளுக்கு மேலோக களையெடுக்கும் கருவி ஒன்று வடிவமைக்க எண்ணி தற்பொழுது முடித்து விட்டேன். இது மானாவரி நிலத்திற்கும், நெல், பருத்தி , கரும்பு போன்ற பயிர்களுக்கும் பயன்படுத்தலாம். இதை கையாலே இயக்கலாம்.

இந்த கருவியின் விலை ரூ. 10,000 வரை ஆகிறது. (இதற்கு முன்னர் ஸ்கூட்டர் என்ஜின், மூலம் களையெடுக்கும் கருவி செய்து அதை கைவிட்டு விட்டேன்). நான் மல்பெரி செடி சாகுபடி செய்து 2 வருடமாகிறது. இதன் மூலம் பட்டுபுழு வளர்க்க உள்ளேன். எங்கள் ஊரில் என்னுடன் பல விவசாயிகளும் மல்பெரி நட்டிருந்தனர். மற்ற விவசாயிகள் இரசாயனஉரம் இட்டு வளர்த்து வந்தனர். வறட்சியால் அவர்களுடைய தோட்டம் காய்ந்துள்ளது. ஆனால் வெறும் குப்பையை மட்டும் போட்டு மல்பெரி வளர்த்தேன். எந்த நீர்பாசனமில்லாமல் நன்கு வளர்ந்துள்ளது.

இந்தியபாரதிதாசன்
தஞ்சாக்கூர், திருப்பாச்சேத்தி வழி
மானாமதுரை தாலுகா சிவகங்கை மாவட்டம்
செல்: 9047290676

மாட்டு மடிநோய்க்கு

நான் 25 மாடுகளில் நித்தம் பால் கறந்து வருகிறேன். பால் மாடுகளில் பால் திரிந்து மஞ்சளாக வரும். இது மடிநோயின் அறிகுறி இதற்கு எனது நண்பர் மூலம் ஒரு வைத்தியத்தை தெரிந்து கொண்டு தற்சமயம் பயன்படுத்தி வருகிறேன். இதன்படி கோவைத்தழை ஒரு கைப்பிடி அரைத்து 50 கிராம் டால்டா சேர்த்து மடி முழுவதும் நன்கு தடவி விட வேண்டும். இம்முறையை

2–3 நாட்கள் குணமாகும் வரை தொடர்ந்து போட்டு வந்தால் மடி நோய் குணமாகும். இம்முறையைச் கையாண்டு 4 மாடுகளை குணப்படுத்தியுள்ளேன்.

ஆர். நந்தகோபால்
த/பெ. ராமசாமி கோனார்
வடக்கு தெரு
உ. வாடிப்பட்டி
உத்தப்பநாயக்கனூர் வழி
உசிலம்பட்டி தாலுகா, மதுரை மாவட்டம்

சுயமாக உருவாக்கப்பட்ட பசுமைத் தொழில் நுட்பங்கள், கண்டுபிடிப்புகள் & பாரம்பரிய அறிவைக் கண்டறியும் 9 வது சுற்றுப்போட்டி

தேசிய கண்டுபிடிப்பு நிறுவனம் – இந்தியா தனது 9 வது சுற்றுப்போட்டிக்கு சுயமாக உருவாக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள், சிறந்து விளங்கும் பாரம்பரிய அறிவு , உத்திகள் வரவேற்கப்படுகின்றன. இந்த பசுமைத் தொழில்நுட்பங்கள் யாருடைய உதவியில்லாமல் சுயமாக அடித்தள மக்களால் அதாவது விவசாயிகள், கைவினைஞர்கள், மீனவர்கள், பெண்கள், சேரியில் குடியிருப்போர், லேத் பட்டறையில் வேலை செய்யும் பணியாளர்கள், மெக்கானிக்குகள், மாணவர்கள் போன்றவர்களால் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இந்த கண்டுபிடிப்புகள் வேளாண்மை, இயந்திரங்கள், வீட்டு உபயோக சாதனங்கள், எரிசக்தி மற்றும் மின்சக்தியில் சேமிப்பு அல்லது உற்பத்தி செய்தல், போக்குவரத்து , புதிய பயிர் ரகங்கள், மூலிகை வைத்தியம் (மனிதர்களுக்கு மற்றும் கால்நடைகளுக்கு) , வேலைப்பழுவை குறைக்கும் கண்டுபிடிப்புகள் மற்றும் இது போன்ற செலவை குறைத்து நீடித்து பயன்படும் பசுமைத் தொழில்நுட்பங்கள் அடிப்படையில் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். கண்டுபிடிப்புகள் மட்டுமின்றி கண்டுபிடிப்பை வடிவமைப்பதற்கான யோசனைகளும் உத்திகளும் கூட வரவேற்கப்படுகின்றன. பாரம்பரிய அறிவை பாதுகாத்து வைத்துள்ளோர் , பெண்கள், மாற்றுதிறனாளிகளின் கண்டுபிடிப்புகளுக்கும் சிறப்பு விருதுகள் வழங்கப்படும். அனைத்து பிரிவுகளிலும் இளங்கலை பட்டப்படிப்பு வரை படித்தவர்கள் அல்லது இதற்கு குறைவாக படித்தவர்கள் மற்றும் படிப்பறிவு இல்லாதவர்களின் சுயமாக உருவாக்கப்பட்ட கண்டுபிடிப்புகள் மட்டும் பரீசிலினை செய்யப்படும்.

பரிசுத் தொகை

பரிசுதொகை ரூ. 10,000 லிருந்து ரூ, 7,50,000 வரை ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும். மொத்தப்பரிசுத் தொகையில் 35–52 சதவீதம் சிறந்த முதல் 3 கண்டுபிடிப்பாளர்களுக்கு வழங்கப்படும்; 15 சதவீதம் கண்டுபிடிப்பாளரின் எந்ததொரு சமுதாய முன்னேற்றப்பணிக்கும் வழங்கப்படும். இப்போட்டிக்கு கண்டுபிடிப்பாளர்களை அடையாளம் பார்த்து தொகுக்கும் தனிநபர்கள் , நிறுவனங்களும் கௌரவிக்கப்படுவார்கள். அடித்தள கண்டுபிடிப்புகளை மேன்மைப்படுத்தி மதிப்பு கூட்டும் வல்லுநர்கள் , கண்டுபிடிப்புகளை ஊக்கப்படுத்தும் பத்திரிக்கையாளர்கள் அல்லது மின் ஊடகத்து தகவல்லுநர்களும் கௌரவிக்கப்படுவார்கள்.

தொகுப்புகள் வந்துசேர வேண்டிய கடைசி நாள் 31 . 3 . 2015

தொகுப்புகளை அனுப்ப வேண்டிய முகவரி

National Innovation Foundation - India
Satellite Complex , Premchand Nagar Road
Ahmedabad – 380 015 , Gujarat ,
Ph : 079 – 267302456 , 267302095
Fax : (079) 26731903
Email - campaign@nifindia.org
Website - www.nif.org.in

கால்நடை மூலிகை வைத்தியம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பயிற்சி முகாம்

2015 பிப்ரவரி மாதம் 6–7 அன்று மதுரை மாவட்டம், உத்தப்பநாயக்கனூர் வாடிப்பட்டி கிராமத்தில் இரண்டு நாட்கள் கால்நடை மூலிகை வைத்தியம் மற்றும் கறவை மாடுகள் பராமரிப்பு பயிற்சி முகாம் நடைபெற்றது. இந்த பயிற்சியை மதுரை நபார்டு வங்கி மேலாளர் திரு. சங்கர்நாராயண் துவக்கி வைத்தார். இதில் கறவை மாடுகள் பராமரிக்கும் விவசாயிகள் 35 நபர்கள் பங்கு கொண்டனர். இப்பயிற்சியில் ரெங்கநாதன் கீழ்கண்ட பராமரிப்பு முறைகளை எடுத்துரைத்தார்.

மாட்டுக் கொட்டகை தரைப்பகுதி சுத்தமாகவும் ஈரம் இல்லாமல் பராமரித்தல், 4 பசுவிற்கு சுகாதாரமான கொட்டகை முன்பக்கம் உயரம் – 11 அடி , பின்பக்கம் உயரம் – 10 அடி, தீவனம், தண்ணீர், தீவனம் , தண்ணீர், தீவனம் முறையை 4 அடி, 3 அடி, 4 அடி, 4 அடி, 3 அடி, 4

அடி, 22 அடி இடது பக்கம், 10 அடி வலது பக்கம், 10 அடி தீவனம், தண்ணீர் தொட்டி 1.5 அடி வேண்டும் .

பசு+கன்று சுகாதர பராமரிப்பின் முக்கியத்துவம்

தண்ணீர் – 80 லிட்டர் நாள் ஒன்றுக்கு சுத்தமான தண்ணீர் , அடர் தீவனம், உலர் தீவனம், பசும் தீவனம் தாது உப்புக்கள் , வைட்டமீன், சமையல் சோடா / சமையல்உப்பு , உடல் பராமரிப்பு உற்பத்தி (பால்) , கருவளர்ச்சி ஆகியவை தேவை அடிப்படையில் தீவனம் கணக்கிட்டு வழங்க வேண்டும் . பசுக்களில் அமிலத் தன்மையை தவிர்த்து கறவை பசு இறப்பதை தடுக்க மாவுச்சத்து அதிகம் உள்ள தானிய வகை பசுக்களுக்கு அதிகமாக வழங்கும் பட்சத்தில் பசுக்களில் அமிலத்தன்மை அதிகரித்து இரத்தம் சுண்டுதல் ஏற்பட்டு மயக்கத்துடன் இறப்பு ஏற்படும் (Acidosis). இறப்பை தவிர்ப்பதற்கு 25 கிராம் – 50 கிராம் சமையல் சோடாஉள்ளே கொடுக்க வேண்டும். கால்நடை பராமரிப்பில் தீவனம் கொடுக்கும் முறையும் , தேவையில்லாத உணவு தருவதால் மாட்டிற்கு ஏற்படும் உடல் உபாதைகளையும் எடுத்துக் கூறினார். மாட்டிற்கு காலையில் 2 கிலோ பசுந்தீவனமும் , (அகத்தி புல்) மாலையில் 2 கிலோ உலர் தீவனம் (வைக்கோல், கடலைக் கொடி) போன்றவை கொடுக்கலாம்.

மாமியார் மருமகள் சண்டையில் மாட்டிற்கு சேதாரம்

நான் 4 வருடங்களாக புது வாழ்வு திட்டத்தில் மகளிருக்கு கால்நடை பராமரிப்பு பயிற்சி நடத்தி வந்தேன். திருத்தனியில் அருகே நான் பயிற்சி கொடுத்த கே.ஜி. கண்டிகை கிராமத்தில் ஒரு வீட்டில் மாமியார், மருமகள் சண்டை காரணமாக வீட்டிலிருந்த மாட்டிற்கு 2 முறை சோறு வைத்து இறக்க நேர்ந்தது. மாமியார் கீழ் வீட்டிலும் மருமகள் மாடி வீட்டிலும் வசித்து வந்தனர். ஒரு சமயம் இவர்கள் சண்டை போட்டு விட்டு ஒருவருக்கொருவர் பேசாமல் இருந்தனர். மாட்டிற்கு இருவரும் தனித்தனியே சாதத்தை (அரிசி சாதம்) வைத்து விட்டனர். காலையில் மாமியார் மீதமுள்ள சாத கழிவையும் மாலையில் மருமகள் மீதமுள்ள சாத கழிவையும் மாட்டிற்கு தந்தனர். சண்டைக்கு முன் ஒரு நாளைக்கு ஒரு முறை மட்டும் சாதக்கழிவை கொடுப்பது வழக்கம். இதனால் மாட்டிற்கு வயிறு உப்பிசம் ஆகி மாடு இறந்து விட்டது.

அண்ணி , நாத்தனார் கவனக் குறைவால் ஆட்டிற்கு சேதாரம்

நாத்தனார் அண்ணன் வீட்டிற்கு விருந்தினராக வந்திருந்தாள். வீட்டிற்கு வந்த பின்னர் பெரும்பாலும் காலை வேலையில் சற்று தாமதமாகவே எழுந்திருப்பாள். ஆனால் அதே வீட்டில் திருமணமான அண்ணன் மனைவி (அண்ணி) காலையில் சீக்கிரமாகவே எழுந்து வேலை செய்வாள். அப்பொழுது காலையில் சினை ஆடு பசியில் தீவனத்திற்காக கத்தியது. அப்போது மீதமுள்ள சாத கழிவை போட்டாள் . பின்னர் தாமதமாக எழுந்த நத்தினார் ஆடு கத்தியதை கண்டவுடன் . அவளும் ஆட்டிற்கு மீதமுள்ள சாத கழிவையும் போட்டாள் . இதனால் ஆட்டிற்கு வயிறு உப்பிசமாகி விட்டது. இந்த ஆட்டை 1 மணி நேரத்தில் வைத்தியம் செய்து குணப்படுத்தி விட்டேன்.

ரெங்கநாதன்
டி. குன்னத்தூர் ,
காளியம்மன் கோவில் தெரு ,
பேரையூர் தாலுகா ,மதுரை மாவட்டம்,செல் : 8903294563

இயற்கை கம்ப்யூட்டர் சாம்பிராணி

மரத்தூள், சாம்பிராணி , பிசுக்கு , ரோஜா தூள், கஸ்தூரி மஞ்சள், சாணம் , மாட்டுக்கோமியம் கலந்து கம்ப்யூட்டர் சாம்பிராணி தயாரித்து வருகிறேன். இதை மதுரை சேவா அளித்த பயிற்சி மூலம் பழகிக் கொண்டு கடந்த 1 வருடகாலமாக செய்து வருகிறேன். எங்கள் ஊரிலேயே பலர் வாங்கி உபயோகப்படுத்தி வருகிறார்கள்.

சிவலட்சுமி
ஸ்ரீ கிருஷ்ணா கோசாலா டிரஸ்ட்
காக்கிவாடன் பட்டி
சிவகாசி (வழி), செல் : 9442849699

இயற்கை பல்பொடி

எரு விராட்டி எரித்த சாம்பல், கிராம்பு, சுக்கு ,கடுக்காய்தூள், வேப்பம்பட்டை தூள், நெல்லி வத்தல்தூள், தான்றிக்காய் தூள், எலுமிச்சம்பழத்தோல் தூள், சாதாரண உப்பு கொண்டு பற்பொடி தயாரித்து வருகிறோம். இதனை பயன்படுத்தியவர்கள் பல்கரை நீங்கியதை கூறி வருகின்றனர். தேவையானோர் எங்களை அணுகலாம்.

செல்லம்
சேவா , 45 டி.பி.எம் நகர்
விராட்டிபத்து , மதுரை – 16
தொலைபேசி – 0452 –2380082

தலை ஈற்றில் 3 கன்றுகள் ஈன்ற மலை மாடு

தேனி மாவட்டம், உத்தமபாளையம் தாலுகா, இராயப்பன்பட்டி கிராமத்தில் வசிக்கும் சி.கென்னடிக்கு 120 மலைமாடுகள் உள்ளன. தை பொங்கல் அன்று ஒரு

தலை ஈற்று மாட்டுக்கு 3 கன்றுகள் பிறந்தன. இது வரை தமிழ் நாட்டில் எந்த மாடும் 3 கன்றுகள் ஈன்றதில்லை என்று மக்கள் கூறுகிறார்கள்.பிறந்த 3ம் நாள் கழித்து கிடேரி கன்று மாடு மிதித்ததால் இறந்து விடும் நிலையில் இருந்தது. மருத்துவரை வர சொல்லி வைத்தியம் பார்த்தும் காப்பாற்ற முடிய வில்லை.

எம். ஜெயபாண்டி , சேவா

மூலிகை மருந்து தூள் (Dust)

மூலிகைப் பூச்சிக்கொல்லி மருந்து தயாரித்து விவசாயிகளுக்கு விநியோகித்துவந்தேன். வேம்பு, புகையிலை, வசம்பு பயன்படுத்தி தயார் செய்தேன். தற்சமயம் சோற்றுக்கற்றாழை, சுண்ணாம்பு, மஞ்சள் தலா 2:1:1 என்ற அளவில் சேர்த்து தனித்தனியாக காயவைத்து பவுடர் செய்து கலந்து உபயோகித்து வருகிறேன். இது சம்பங்கி வேரழுகல் நோயைக் குணப்படுத்தும். வீட்டுத்தோட்டத்தில் மிளகாய், முருங்கை செடிகளுக்கு தெளித்துப்பார்த்ததில் எந்த நோயும் வரவில்லை.

நாகராஜன், குறலம்பட்டி. திண்டுக்கல் மாவட்டம்.

உயிர்சக்தி வேளாண்மை பஞ்சாங்கம்

இது நமது பாரம்பரிய பஞ்சாங்கம் கணிப்பதிலிருந்து சிறிது மாறுபட்டதாகும். அவ்வப்போது கோள்களின் சரியான நிலைப்பாடு குறித்து விண்வெளி / வானிலை தகவல் மையங்களில் மூலமாக எடுக்கப்படுவதால் இதனை அறிவியல் பூர்வமாகவும் ஏற்றுக் கொள்ளலாம்.

சந்திரனும், சனியும் பூமிக்கு எதிர் எதிராக இருக்கும் சமயம்

விதைத்தல் மற்றும் நடவு செய்தல் ; பூஞ்சாண நோயைத் தவிர்க்க கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல்.

கீழ்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன

பூமிக்கு கீழே விளையும் பயிர்களின் விதைப்பு / நடவு / அறுவடை செய்தல் ; கம்போஸ்ட் தயாரிப்பு துவக்குதல் / நிலத்திற்கு குப்பை இடுதல் ; கொம்பு சாணம் உரம் தெளித்தல் ; கவாத்து செய்தல் : மரம் வெட்டுதல் ; மரக்கன்று நடுதல் ; உழவு அடித்தல் .

மேல்நோக்கு நாட்களில் செய்ய வேண்டியன

கொம்பு சிலிக்கா உரம் தெளித்தல் ஒட்டு கட்டுதல் பதியம் போடுதல் பூமிக்கு மேல் விளையும் பயிர் விதைப்பு , அறுவடை செய்தல், சேமித்தல், திரவ உரம் தெளித்தல்.

பௌர்ணமி, பௌர்ணமிக்கு 48 மணி நேரம் முன்பு

திரவ உரம் பயிருக்கு இலை வழி கொடுத்தல் , மண்ணில் திரவ மருந்து தெளித்தல் (Drenching) கால்நடைகளுக்கு குடற்புழு நீக்க மருந்து கொடுத்தல்.

அமாவாசையில் செய்ய வேண்டியது

அமாவாசைக்கு 48 மணி நேரம் முன்பு விதைப்பு செய்தல். தேய்பிறையில் அல்லது அமாவாசையில் மரம் வெட்டுதல்.

நட்சத்திரம் , ராசி பார்த்து விதைத்தல்

விதைக்காக, பழத்திற்காக, வேர்க்கிழங்கிற்காக பூக்களுக்காக விதைக்கப்படும் பயிர்களை அந்தந்தக் குறிப்பிட்ட நாளில் விதைக்கப்பட வேண்டும். சந்திரன் ஒவ்வொரு ராசி மண்டலத்தையும் சுற்றிவரும் சமயம் எந்த ராசி பக்கம் வந்து கொண்டிருக்கிறதோ அந்த ராசியின் குணத்தை பூமிக்குக் கொடுக்கும். உதாரணமாக கன்னி ராசியின் பக்கம் வரும் சமயம் மண் குணத்தை காட்டுமாதலால் அதனுடன் தொடர்பு கொண்ட வேர் / கிழங்கிற்காக அறுவடை செய்யப்படும் சர்க்கரை வள்ளிக் கிழங்கை நடவு செய்யலாம். காற்று , மண், வெப்பம் , நீர் தொடர்புள்ள இராசி நாட்களில் அந்தந்த குணம் கொண்ட பயிரை விதைக்கலாம்.

பூமிக்கு அருகில் உள்ள நிலா நாள்

விதைப்பதைத் தவிர்க்க வேண்டும்.

பூமிக்கு தொலைவில் உள்ள நிலா நாள்

விதைப்பது நல்லது

சந்திரன் பாதையும் சூரியன் பாதையும் குறுக்கிடும் நாட்களில் எல்லா விவசாய வேலைகளையும் தவிர்க்க வேண்டும்.

Dr. லூகாஸ் டெஸ்கெல் , உயிர்சக்தி பயிற்சி மையம் ஆரோசில்பம் , ஆரோவில் – 605 101; 0413 – 2622469

2015 உயிர் சக்தி வேளாண்மை பஞ்சாங்கம் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.